# தினபூமி

thinaboomi.com

புதுச்சேரி, புதன், ஏப்ரல் 12, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**மன்னர் சார்லஸ் முடிசூட்டு விழா எப்படி நடைபெறும்? பக்கிங்ஹாம் அரண்மனை அறிக்கை**

...2-ம் பக்கம்


**பா.ஜ.க.விற்கு ஒருபோதும் பயப்பட மாட்டேன்**

**வயநாட்டில் ராகுல் காந்தி பேச்சு**

...3-ம் பக்கம்

**ஹெல்மெட்டை மைதானத்தில் வீசிய லக்னோ வீரர் அவேஷ் கானுக்கு ஐ.பி.எல். நிர்வாகம் எச்சரிக்கை**

...7-ம் பக்கம்





● சித்திரை விஷு சிறப்பு பூஜைகளுக்காக கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவில் நடை நேற்று திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

### தமிழ் வருடபிறப்பு, ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு

# சென்னையில் இருந்து கூடுதலாக ஆயிரம் சிறப்பு பஸ்கள் இயக்கம்

## போக்குவரத்து துறை சிறப்பு ஏற்பாடு

சென்னை, ஏப். 12-

தமிழ் வருட பிறப்பு மற்றும் ரம்ஜான் பண்டிகை என தொடர் விடுமுறை வருவதால் வெளியூர் செல்லும் மக்களின் வசதிக்காக சென்னையில் இருந்து ஆயிரம் சிறப்பு பஸ்களை இயக்க போக்குவரத்து துறை முடிவு செய்துள்ளது.

கோடைக்காலம் தொடங்கி விட்டதால் பஸ் பயணம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த வாரம் புனித வெள்ளி, அரசு விடுமுறை என்பதால் தொடர்ச்சியாக 3 நாட்கள் விடுமுறை கிடைத்தது. இதனால் வெளியூர் பயணம் அதிகரித்தது. சென்னையில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

கோடை விடுமுறை, பண்டிகை காலம், விசேஷ நாட்கள் அடுத்தடுத்து வருவதால் பஸ்களில் கூட்டம் அதிகரிக்கிறது. வரும் 14-ம் தேதி (வெள்ளிக்கிழமை) தமிழ் வருடப் பிறப்பு கொண்டாடப்படுகிறது. அதைத் தொடர்ந்து 22-ம் தேதி ரம்ஜான் பண்டிகை வருகிறது. இதனால் வெளியூர் பயணம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து விடுமுறை நாட்கள் வருவதால் கூடுதலாக 1000 பஸ்களை இயக்க அரசு போக்குவரத்து கழகங்கள் திட்டமிட்டுள்ளன. தமிழ் வருடப்பிறப்பு வெள்ளிக்கிழமை வருவதால் 13-ம் தேதி வியாழக்கிழமை 500 சிறப்பு பஸ்கள் கூடுதலாக இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 3 நாட்கள் தொடர் விடுமுறை விடப்படுவதால் மக்கள் கூட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கருதி சென்னையில் இருந்து பிற மாவட்டங்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

இதே போல ரம்ஜான் பண்டிகை 22-ம் தேதி (சனிக்கிழமை) வருவதால் 21-ம் தேதி (வெள்ளிக்கிழமை) 500 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சிறப்பு பஸ்கள் இயக்குவது குறித்து அதிகாரிகள் கூறுகையில்,

கடந்த வாரம் கோயம்பேடு பஸ் நிலையத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. அதனால் கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அதேபோல தமிழ் புத்தாண்டு மற்றும் ரம்ஜானையொட்டி விழுப்புரம், சேலம், கும்பகோணம், கோவை, மதுரை போக்குவரத்து கழகங்கள் மூலம் கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். வழக்கமாக இயக்கப்படும் 2,100 பஸ்களுடன் கூடுதலாக 500 பஸ்கள் வீதம் இயக்க திட்டமிட்டுள்ளோம் என்றனர்.

# தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்த சுப்ரீம் கோர்ட்டு அனுமதி

புதுடெல்லி, ஏப். 12-

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்த சுப்ரீம் கோர்ட் அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி, காந்தி ஜெயந்தி அன்று தமிழகத்தில் 50 இடங்களில் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் சார்பில் பேரணி நடத்த தமிழக காவல்துறையால் அனுமதி மறுக்கப்பட்டது.

அதை தொடர்ந்து தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்குமாறு கடந்த ஆண்டு செப்டம்பர் 22-ம் தேதி ஐகோர்ட் பிறப்பித்த உத்தரவை போலீசார் அமல்படுத்தவில்லை எனக் கூறி ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகள் சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து தமிழகத்தில் 6 இடங்களைத் தவிர 44 இடங்களில் பாதுகாப்போடு உள்அரங்கு கூட்டமாக நடத்துவதற்கு ஐகோர்ட் தனி நீதிபதி அனுமதி வழங்கி உத்தரவிட்டார். இந்தக் கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

இந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த ஐகோர்ட்டின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் சுற்றுச்சுவருடன் கூடிய மைதானங்களில் அணிவகுப்பு நடத்த வேண்டுமென்ற தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டனர். அமைதியான முறையில் அணிவகுப்பு பேரணி நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அரசுக்கும் உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி ராமசுப்பிரமணியன் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத் தரப்பில் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி ஆஜராகி வாதிட்டார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மகேஷ் ஜெத்மலானி வாதிட்டார்

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தனர்.

இந்த வழக்கில் நேற்று நீதிபதி ராமசுப்பிரமணியன் தலைமையிலான அமர்வு தீர்ப்பு வழங்கியது. நீதிபதிக்கு பிறப்பித்துள்ள தீர்ப்பில், தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. சென்னை ஐகோர்ட் தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

ஆர்.எஸ்.எஸ். பேரணி வழக்கில் சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் உறுதி செய்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு எதிரான வழக்கில் அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்வதாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்து உத்தரவிட்டது.

கடந்த 7 மாத காலமாக நடைபெற்று வந்த வழக்கு முடிந்துள்ளதால் விரைவில் ஆர்.எஸ்.எஸ். பேரணி நடத்தப்படுவதற்கான தேதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நிலக்கரி ஏல ஒப்பந்த நடைமுறைக்கு விலக்கு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து விவசாய சங்க பிரதிநிதிகள் நன்றி

சென்னை, ஏப். 12-

நிலக்கரிக்கான ஏல ஒப்பந்த நடைமுறையிலிருந்து டெல்டா பகுதிகளை விலக்கிட மத்திய அரசை வலியுறுத்தி, ரத்து செய்திட நடவடிக்கை எடுத்தமைக்காக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காவிரி டெல்டா பகுதி விவசாய சங்க பிரதிநிதிகள் நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாட்டின் முக்கிய உணவு உற்பத்தி மண்டலமான காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி எடுப்பது தொடர்பாக மத்திய அரசின் நிலக்கரி அமைச்சகம் ஏல அறிவிப்பு வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் நிலக்கரிக்கான ஏல ஒப்பந்த நடைமுறையிலிருந்து டெல்டா பகுதிகளை நீக்கிடவும், உணவு பாதுகாப்பினை உறுதி செய்திடவேண்டிய தேவையை வலியுறுத்தியும் முதல்வர் பிரதமர் மோடிக்கு கடந்த 4-ம் தேதி கடிதம் எழுதியிருந்தார்.

தொடர்ந்து, சட்டப்பேரவையில் காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கையினை ரத்து செய்திட கோரி சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக மத்திய அரசு காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரி எடுக்கும் ஏல அறிவிப்பினை ரத்து செய்தது.

காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலன் காக்க, நிலக்கரிக்கான ஏல ஒப்பந்த நடைமுறையிலிருந்து டெல்டா பகுதிகளை விலக்கிட மத்திய அரசை வலியுறுத்தி, ரத்து செய்திட நடவடிக்கை எடுத்தமைக்காக, முதல்வர் மு.க. ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம், தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்க தலைவரும், காவிரி விவசாயிகளின் பாதுகாப்பு சங்கத்தின் பொதுச் செயலாளருமான காவிரி தனபாலன், திருவாரூர் மாவட்டம், காவிரி டெல்டா விவசாயிகள் குழுமத்தின் பொதுச் செயலாளர் சத்தியநாராயணா உள்ளிட்டோர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் நாகை மாலி, சிந்தனைச் செல்வன், கோ. அய்யப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

### 71,000 பேருக்கு அரசு வேலை:

# பிரதமர் மோடி நாளை பணி நியமன ஆணை வழங்குகிறார்

புதுடெல்லி, ஏப். 12-

புதிதாக அரசு பணிகளில் சேர உள்ள 71 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணையை பிரதமர் மோடி நாளை 13-ம் தேதி வழங்குகிறார்.

படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப அரசு வேலை வாய்ப்புகளை அளிக்கும் நோக்கில் மத்திய அரசு ரோசர் மேளா என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அரசு பணிக்குத் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தமாக பணி ஆணை வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 71 ஆயிரம் பேருக்கு பணி ஆணை வழங்குவதற்கான நிகழ்ச்சி நாளை 13-ம் தேதி நடைபெற உள்ளது. இதில், பிரதமர் மோடி ஆன்லைன் முறையில் அனைவருக்கும் பணி ஆணை வழங்க உள்ளார்.

ரயில் நிலைய மேலாளர், காவல் ஆய்வாளர், காவல் உதவி ஆய்வாளர், காவலர், இளநிலை கணக்கர், வருமான வரித்துறை ஆய்வாளர், வரி உதவியாளர், உதவி பேராசிரியர், ஆசிரியர், நூலகர், செவிலியர், நேரடி உதவியாளர் என அரசின் பல்வேறு பணிகளுக்கு இவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நாளை 13-ம் தேதி பணி நியமன ஆணையை பெறும் இவர்கள் மத்தியில், பிரதமர் மோடி காணொளி வாயிலாக உரையாற்ற உள்ளார். இதையடுத்து, இவர்களுக்கு ஆன்லைன் முறையில் பயிற்சி அளிக்கப்படும். இதில், இவர்கள் தங்களின் துறையில் எவ்வாறு பணியாற்ற வேண்டும், எத்தகைய தவறுகளில் ஈடுபடக் கூடாது என்பன உள்ளிட்டவை குறித்து அறிவுரையும் பயிற்சியும் வழங்கப்படும். இதையடுத்து, இவர்கள் தங்களுக்கான துறையில் தங்களுக்கான வழக்கமான பணியில் ஈடுபடத் தொடங்குவர்.

ரோசர் மேளா திட்டத்தின் கீழ் 10 லட்சம் வேலைவாய்ப்புகளை அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இளைஞர்களுக்கு அர்த்தமுள்ள வாய்ப்புகள் வழங்கவும், அவர்களின் நிலை மேம்படவும், நாட்டின் வளர்ச்சிக்கான அவர்களின் பங்களிப்பு தொடரவும் இந்த திட்டம் முக்கிய பங்களிப்பை அளிக்கும் என அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தெலுங்கானாவில் நிலுவையில் இருந்த

# 3 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கிய கவர்னர் தமிழிசை

ஐதராபாத், ஏப். 12-

தெலுங்கானாவில் நிலுவையில் இருந்த 10 மசோதாக்களில் 3 மசோதாக்களுக்கு கவர்னர் தமிழிசை ஒப்புதல் வழங்கியுள்ளார்.

தெலுங்கானா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்து அரசியலமைப்பு முட்டுக்கட்டை ஏற்படுத்தியதற்காக கவர்னர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு எதிராக தெலுங்கானா அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தது.

கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் மீதான மனுவை சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்க திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நிராகரிக்கப்பட்டு நிலுவையில் உள்ள 3 மசோதாக்களுக்கு கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் அனுமதி வழங்கி உள்ளார்.

தெலுங்கானா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களும் தெலுங்கானா கவர்னரின் அலுவலகத்தில் 7 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன, மீண்டும், மீண்டும் நினைவூட்டப்பட்ட போதிலும் அவை அனுமதிக்கப்படவில்லை. இது தெலுங்கானா அரசுக்கு கவர்னர் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது.

அதை தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் சுப்ரீம் கோர்ட்டை தெலுங்கானா அரசு நாடியது. இந்த நிலையில் வனவியல் பல்கலைக் கழக தெலுங்கானா மசோதா, 2022 மற்றும் தெலுங்கானா பல்கலைக் கழகங்களின் பொது ஆட்சேர்ப்பு வாரிய மசோதா, 2022 ஆகிய 2 முக்கிய மசோதாக்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் 3 மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளதாக தெலுங்கானா அரசு வட்டாரம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மாநில அரசு தனது ஒப்புதலுக்காக அனுப்பிய பல்வேறு மசோதாக்கள் மீது கவர்னர் எடுத்த நடவடிக்கை குறித்து சுப்ரீம் கோர்ட்டில் விரிவான விவரம் அளிக்கப்பட்டது.

# இந்த ஆண்டு இயல்புக்கும் குறைவாகவே மழை பெய்யும்

## தனியார் வானிலை மையம் தகவல்

புது டெல்லி, ஏப். 12-

இந்த ஆண்டு இந்தியாவில் இயல்புக்கும் குறைவான அளவிலேயே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று ஸ்கைமேட் என்ற தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


இந்தியாவில் பருவமழையை நம்பியே விவசாயிகள் சாகுபடி பணிகளில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் அதிக அளவு மழை பொழிவு இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் பெய்யும் மழையின் அளவை பொறுத்தும், வான் மண்டலத்தில் உருவாகும் ஈரபதத்தின் அடிப்படையிலும் இந்த ஆண்டு எவ்வளவு மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்பதை வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கும்.

அதன்படி இந்த ஆண்டு இந்தியாவில் இயல்புக்கும் குறைவான அளவிலேயே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று ஸ்கைமேட் என்ற தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. அதன்படி 2023-ம் ஆண்டில் 94 சதவீதம் அளவுக்கே மழை பெய்யும் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஆண்டுக்கு சராசரி மழை அளவு என்பது 90 சதவீதத்துக்கும் குறைவாக இருந்தால் அது மிகவும் குறைவான மழை என்பதை குறிக்கும். இது போல 90 முதல் 95 சதவீதத்திற்குள் மழை பெய்தால் அது இயல்புக்கும் குறைவான மழை பொழிவு ஆகும். 96 சதவீதம் முதல் 104 சதவீதத்திற்கு மழை பெய்தால் அது இயல்பான மழை பொழிவு. 105 சதவீதம் முதல் 110

(கடைசி பக்கம் பார்க்க)


மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| 311.21 | 98.25 |
| பாயிண்ட் 60157.72 | பாயிண்ட் 17222.3 |



**தங்கம்**
1 சவரன் ₹45,040
1 கிராம் ₹5,630



**வெள்ளி**
1 கிலோ ₹80,400
1 கிராம் ₹80.40

**டாலர்** ₹82.05

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# மன்னர் சார்லஸ் முடிசூட்டு விழா எப்படி நடைபெறும்?

## பக்கிங்ஹாம் அரண்மனை அறிக்கை

**லண்டன், ஏப். 12-**

இங்கிலாந்து மன்னர் 3-ம் சார்லசின் முடிசூட்டு விழா மே மாதம் 6-ம் தேதி நடைபெறவுள்ளது. இந்த பிரமாண்ட விழா எப்படி நடைபெறும் என்ற விவரங்களை பக்கிங்ஹாம் அரண்மனை அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

கடந்த 1953-ம் ஆண்டு மறைந்த ராணி 2-ம் எலிசபெத்தின் முடிசூட்டு விழா நடந்தது. அதனை தொடர்ந்து, 70 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது அந்த பாரம்பரிய விழா நடைபெற இருக்கிறது. இந்த கோலாகலத்தை காண ஒட்டுமொத்த இங்கிலாந்தும் தயாராகி வருகிறது.

இந்த நிலையில் இந்த பிரமாண்ட விழா எப்படி நடைபெறும் என்ற விவரங்களை பக்கிங்ஹாம் அரண்மனை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

விழா நடைபெறும் மே 6-ம் தேதி காலை மன்னர் 3-ம் சார்லஸ் மற்றும் ராணி கமிலா ஆகிய இருவரும் தங்கமுலாம் பூசப்பட்ட மற்றும் குளிர்சாதன வசதி கொண்ட குதிரை வண்டியில் பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்துக்கு வருவார்கள்.

சார்லசின் முடிசூட்டு விழாவுக்காக இங்கிலாந்து மன்னர்கள் பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த 700 ஆண்டுகள் பழைமையான தங்க முலாம் பூசப்பட்ட சிம்மாசனம் தயார்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முடிசூட்டு விழாவின் போது மன்னர் மூன்றாம் சார்லஸ் பாரம்பரிய மரபுப்படி கையில் செங்கோல் ஏந்தி அந்த சிம்மாசனத்தில் அமர்வார்.

அதை தொடர்ந்து, மூத்த மதகுருமார்களால் புனிதப்படுத்தப்பட்டு, மன்னர் ஆசீர்வதிக்கப்படுவார். அதன் பிறகு, புனித எட்வர்டின் கிரீடம் மன்னர் 3-ம் சார்லசுக்கு சூட்டப்படும். தொடர்ந்து பக்கிங்ஹாம் அரண்மனையின் பால்கனியில் இருந்து கொண்டு, நாட்டு மக்களுக்கு புதிய மன்னர் சார்லஸ் உரையாற்றுவார்.

அந்த தினமே, மன்னர் சார்லசின் மனைவியான கமிலாவும் இங்கிலாந்து ராணியாக முறைப்படி அறிவிக்கப்படுவார். மன்னரின் முடிசூட்டு விழாவில் உலகம் முழுவதிலும் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரபலங்களும், இங்கிலாந்தை சேர்ந்த தொண்டு மற்றும் சமூக குழுக்களின் 850 பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தென்கொரியாவுடன் தகவல் தொடர்பை மீண்டும் துண்டித்தது வடகொரியா

**சியோல், ஏப். 12-**

1950-களில் நடந்த கொரிய போரின் போது வடகொரியாவும், தென்கொரியாவும் தனித்தனி நாடுகளாக பிரிந்தன. அப்போது முதல் இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான பகைமை நிலவி வருகிறது. எனினும் அவ்வப்போது இருநாடுகளும் அமைதி பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை எடுப்பதும், பின்னர் அது கைவிடப்படுவதும் தொடர்கதையாக உள்ளது. அந்த வகையில் கடந்த 2018-ம் ஆண்டு இருநாடுகளின் எல்லையில் உள்ள ராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் தகவல் தொடர்பு அலுவலகம் அமைக்கப்பட்டு, இருநாடுகள் இடையே அரசு நிலையிலான நேரடி தொலைபேசி இணைப்பு தொடங்கப்பட்டது.

ஆனால் கடந்த 2020-ம் ஆண்டு வடகொரியாவில் இருந்து தென்கொரியாவுக்கு தப்பி சென்றவர்கள் வடகொரியாவுக்கு எதிரான துண்டு பிரசுரங்கள் அடங்கிய ஹீலியம் பலூன்களை வடகொரியாவுக்கு அனுப்பியது சலசலப்பை ஏற்படுத்தியது.

இதனால் கோபமடைந்த வடகொரியா தகவல் தொடர்பு அலுவலகத்தை குண்டு வைத்து தகர்த்ததுடன், தென்கொரியாவுடனான நேரடி தொலைபேசி இணைப்பை துண்டித்தது. எனினும் ஓர் ஆண்டுக்கு பின்னர் வடகொரியா, தென்கொரியா இடையே தகவல்தொடர்பு மீண்டும் தொடங்கியது. இந்த நிலையில் அண்மைகாலமாக தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருவது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது. கூட்டுப்போர் பயிற்சியை கைவிடும்படி இருநாடுகளையும் வடகொரியா தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில் தென்கொரியாவுடனான நேரடி தகவல் தொடர்பை வடகொரியா மீண்டும் துண்டித்துள்ளது. கடந்த 4 நாட்களாக தென்கொரியா அரசின் அழைப்பை வடகொரியா தரப்பு ஏற்கவில்லை என தென்கொரியா தெரிவித்துள்ளது. மேலும் அண்டை நாடான தென்கொரியா அமெரிக்காவின் கைப்பாவையாக செயல்படுவதாகவும், தங்களுக்கு துரோகம் செய்வதாகவும் வடகொரியா அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

# 13,500 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும்

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

**புதுடெல்லி, ஏப். 12-**

தமிழகத்தில் தி.மு.க. அரசு சார்பில் மக்கள் நலப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் 13,500 பேரை கடந்த 2011-ம் ஆண்டு அப்போதைய அரசு பணி நீக்கம் செய்தது. இதனை எதிர்த்து மக்கள் நலப்பணியாளர்கள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க உத்தரவிட்டது. ஆனால் அப்போதைய அரசு ஒப் புக் கொள் ள வில் லை. இதனை எதிர்த்து டெல்லி சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்தது. இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையே மக்கள் நலப் ப ணி யா ளர் க ளுக்கு மீண்டும் பணி வழங்கப்படும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டசபையில் வெளியிட்ட அறிவிப்பில்,

மக்கள் நலப்பணியாளர்களை அ.தி.மு.க. அரசு நீக்கம் செய்தது. இதுதொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. இருப்பினும் மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு மாத ஊதியமாக ரூ.7,500 ரூபாய் வழங்கப்படும். மக்கள் நலப்பணியாளர்கள் மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பாளர்களாக தொடர்வார்கள் என அறிவித்தார். இதையடுத்து மக்கள் நலப்பணியாளர்கள் மீண்டும் பணியில் இணைந்துள்ளனர்.

இதற்கிடையே சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்கு நடந்து வந்தது. வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் கூட மக்கள் நலப்பணியாளர்கள் மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பாளர்களாக தொடர்வார்கள் என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கி உத்தரவிட்டது.

இது தொடர்பாக மக்கள் நல பணியாளர்கள் சங்க மாநில தலைவர் செல்லபாண்டியன் கூறுகையில்,

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு ஒருபக்கம் சந்தோஷத்தை தந்தாலும் இன்னொரு பக்கம் வருத்தமும் உள்ளது. மக்கள் நல பணியாளர்கள் பணி வழங்கப்பட்டு 12 வருடம் வேலை பார்த்து விட்டு 20 வருடம் வேலை இல்லாமல் வீட்டில் இருந்து இருக்கிறோம். தி.மு.க. அரசால் பணி வழங்கப்பட்ட எங்களை அ.தி.மு.க. அரசு பணியில் இருந்து நீக்கியது. அதை எதிர்த்து ஐகோர்ட்டில் தொடர்ந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை தி.மு.க. அரசு ஏற்று நிறைவேற்றி இருக்க வேண்டும். அ.தி.மு.க.வால் தொடரப்பட்ட வழக்கை தி.மு.க. மேல் முறையீடு செய்து இருக்க வேண்டியதில்லை.

வறுமை, ஏழ்மை, எதிர்பார்ப்பு காரணமாக எங்களில் சிலர் ரூ. 7 ஆயிரத்து 500 சம்பளத்தில் மீண்டும் வேலைக்கு சேர்ந்தோம். இந்த சம்பளத்தில் என்ன செய்ய முடியும். பணப்பலனும், பணி பாதுகாப்பும் சேர்த்து வழங்கப்பட வேண்டும். எந்த நிபந்தனைகளையும் ஏற்க மாட்டோம் என்று எழுதி கொடுத்து விட்டுத்தான் வேலையில் சேர்ந்தோம்.

அந்த வழக்கு இன்னும் மதுரை ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ளது. எங்களை பொறுத்தவரை 19.8.2014 அன்று மதுரை ஐகோர்ட்டு வழங்கிய தீர்ப்பை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதுதான். எங்கள் சங்கத்தின் நிர்வாக குழு கூடி அடுத்தகட்டமாக முதல்வர் மற்றும் அமைச்சர்களை சந்திப்பது உள்ளிட்ட அணுகு முறைகளை தொடர்வது பற்றி ஆலோசிப்போம் என்று கூறினார்.

# அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட ஜோபைடன் திட்டம்

**வாஷிங்டன், ஏப். 12-**

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோபைடன் இரண்டாவது முறையாக போட்டியிட திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2020-ம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில், ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோபைடன் வெற்றி பெற்று, 46-வது அதிபராக பதவியேற்றார். அவர் பதவியேற்ற சமயத்தில் அமெரிக்காவில் கொரோனா உச்சத்தில் இருந்தது. இதையடுத்து ஜோபைடன் தலைமையிலான அரசு, தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மூலம் அமெரிக்காவில் கொரோனாவை கட்டுக்குள் கொண்டு வந்தது.

இதனிடையே அமெரிக்காவில் அடுத்த அதிபர் தேர்தல் வரும் 2024-ம் ஆண்டு நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் மீண்டும் ஜோபைடன் , கமலா ஹாரிஸ் ஆகியோர் போட்டியிடுவர்களா என்ற கேள்வி எழுந்திருந்தது. இந்நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோபைடன் இரண்டாவது முறையாக போட்டியிட திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஜோபைடன், 2024-ம் ஆண்டு நடைபெறும் அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட திட்டமிட்டுள்ளதாகவும், அதே சமயம் இதுகுறித்த உறுதியான முடிவு விரைவில் வெளியிடுவேன் என்றும் தெரிவித்துள்ளார்.

குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டிரம்ப் போட்டியிடுவேன் என அறிவித்துள்ளார். எனவே டிரம்ப்பை வீழ்த்த ஜோபைடனை மீண்டும் அதிபர் வேட்பாளராக நிறுத்தவற்கான முயற்சியில் ஜனநாயக கட்சி ஆலோசித்து வருகிறது. விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவில் புதிதாக 5,676 பேருக்கு கொரோனா

**புதுடெல்லி, ஏப். 12-**

இந்தியாவில் நேற்று காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றால் புதிதாக 5,676 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் பாதிப்பு 5,880 ஆக இருந்த நிலையில் நேற்று சற்று குறைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 47 லட்சத்து 68 ஆயிரத்து 172 ஆக உயர்ந்துள்ளது. தொற்று பாதிப்பில் இருந்து நாடு முழுவதும் இதுவரை 4 கோடியே 42 லட்சத்து 79 பேர் குணமடைந்துள்ளனர்.

ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 37 ஆயிரத்து 93 ஆக உயர்ந்துள்ளது. இது நேற்று முன்தினத்தை விட 1,894 அதிகமாகும்.

கொரோனா பாதிப்பால் நேற்று முன்தினம் டெல்லி, பஞ்சாப், ராஜஸ்தானில் தலா 3 பேர், கர்நாடகாவில் 2 பேர் மற்றும் குஜராத், அரியானா, மகராஷ்டிரா, தமிழ்நாட்டில் தலா ஒருவர் என 15 பேர் இறந்துள்ளனர். மேலும் கேரளாவில் விடுபட்ட 6 மரணங்கள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மொத்த பலி எண்ணிக்கை 5 லட்சத்து 31 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

# சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

**சென்னை, ஏப். 12-**

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 19.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தொல்பொருள் விளக்க மையம் மற்றும் காலநிலைப் பூங்கா, இரும்பு மற்றும் எஃகு வணிக அங்காடியில் அமைக்கப்படவுள்ள திண்கரை (கான்கிரீட்) சாலைப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வண்டலூர், கிளாம்பாக்கத்தில் உள்ள புதிய புறநகர் பேருந்து முனையம் அருகில் தொல் பொருள் விளக்க மையம் மற்றும் காலநிலைப் பூங்கா 16.90 ஏக்கர் பரப்பளவில் 14.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு முதல்வர் நேற்று அடிக்கல் நாட்டினார்.

சாத்தாங்காட்டில் இரும்பு மற்றும் எஃகு வணிக அங்காடியில் 4 ஏக்கர் பரப்பளவில் கனரக வாகன நிறுத்தும் இடத்தை இரண்டு பகுதிகளாக திண்காரை (கான்கிரீட்) சாலையாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தலைமைச் செயலாளர் இறையன்பு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, கூடுதல் செயலாளர் விஜயலட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நைஜீரியாவில் பஸ், லாரி நேருக்கு நேர் மோதிய விபத்தில் 15 பேர் பலி

**அபுஜா, ஏப். 12-**

நைஜீரியாவில் பஸ், லாரி நேருக்கு நேர் மோதிய விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் எனுகு - போர்ட் ஹார்கோர்ட் நெடுஞ்சாலையில் கடந்த ஞாயிறன்று இரவு ஒரு பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் எதிரே வந்த லாரி மீது மோதியது. இதனால் பஸ் தீப்பிடித்து எரிந்தது.


தகவலறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் தண்ணீரைப் பீய்ச்சியடித்து தீயை அணைத்தனர். இந்த விபத்தில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் பஸ் டிரைவர் தூங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டது தெரிய வந்துள்ளது. மீட்புக் குழுவினர் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அவசர நிலையை முடிவுக்கு கொண்டு வரும்

# சட்ட மசோதாவில் அதிபர் ஜோபைடன் கையெழுத்து

வாஷிங்டன், ஏப். 12-



கொரோனா பெருந்தொற்றுக்கான தேசிய அவசரகால நிலையை முடிவுக்கு கொண்டு வரும் மசோதாவில் அமெரிக்க அதிபர் ஜோபைடன் கையெழுத்திட்டார்.

சீனாவின் உகான் நகரில் கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டு உலகுக்கு தெரிய வந்தது. இதன் பின்னர், பல்வேறு நாடுகளுக்கும் பெருந்தொற்றாக பரவி, பல அலைகளாக பாதிப்புகளை ஏற்படுத்தியது.

அவற்றில் அமெரிக்கா அதிக பாதிப்புகளை சந்தித்து தொற்று மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில் முதல் இடத்தில் உள்ளது. கோடிக்கணக்கானோர் கொரோனா பாதிப்பு ஏற்பட்டும், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் தொற்றால் உயிரிழந்தும் உள்ளனர்.

மூன் றாண் டு க ளாக நீடித்து வரும் இந்த பாதிப்புகளால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி போனது. அரசின் நிதி பெருமளவில், கொரோனா பரிசோதனை, மையங்கள் அமைத்தல் உள்ளிட்டவற்றுக்கு செலவிடப்பட்டது.

இந்த நிலையில், அதிபர் ஜோபைடன் தலைமையிலான அரசு, இந்த தேசிய மற்றும் பொது சுகாதார அவசர கால நிலையை வருகிற மே 11-ம் தேதிக்குள் முடிவுக்கு கொண்டு வர திட்டமிட்டு உள்ளது. அதற்கான அறிவிப்புகளை மே 11-ம் தேதியன்று வெளியிடவும் வெள்ளை மாளிகை திட்டமிட்டு உள்ளது.

அதனால், கொரோனா பெருந்தொற்றுக்கான தேசிய அளவிலான அவசரகால நிலையை முடிவுக்கு கொண்டு வரும் சட்ட மசோதா ஒன்றில் அதிபர் ஜோபைடன் கையெழுத்திட்டு உள்ளார் என்று வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதற்கு முன், மக்கள் பிரதிநிதிகள் சபையில் 229-197 என்ற கணக்கில், ஜனநாயக கட்சியினரில் பலத்த ஆதரவுடன் மசோதா நிறைவேறியது. செனட் சபையிலும் கடந்த மாதம் 63-23 என்ற கணக்கில் மசோதா நிறைவேற்றம் செய்யப்பட்டது. அவையின் பாதிக்கும் மேற்பட்ட ஜனநாயக கட்சியினர் இந்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால், மூன்று ஆண்டுகளுக்கும் கூடுதலாக அமெரிக்காவில் உள்ள இந்த தேசிய அவசரநிலை முடிவுக்கு வரும்.

**12-04-2023**




**மேஷம்:-** தெய்வீகப் பயணங்கள் திருப்தி தரும். அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்.

**ரிஷபம்:-** வழக்கு விவகாரங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து கொள்வது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

**மிதுனம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**கடகம்:-** வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். சந்ததி விருத்தி உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**சிம்மம்:-** குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்யாமல் அனுசரித்து சென்றால் அனுகூலமான நன்மைகளை அடையலாம்.

**கன்னி:-** இன்றைய நாள் கழிவது யுகங்கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அக்கறை கொள்ளுங்கள். நீர்நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

**துலாம்:-** அரசு அதிகாரிகளின் ஆதரவு எப்போதும் இருக்கும். அரசு உயர் பதவிகள் தேடிவரும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** எதிர்பாராத விதமாக தனவரவும் குடும்ப சுகம் குறையும். புதிய முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

**தனுசு:-** தொழிலில் முதலீடுகளால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பயணங்களால் இன்பம் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். தெய்வீக சிந்தனை ஏற்படும்.

**மகரம்:-** பதவி அல்லது இடமாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே வேண்டாத மனக்கசப்பு உருவாகலாம்.

**கும்பம்:-** பெண்களின் உதவியால் பெருமை அடைவீர்கள். மற்றவர்களுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். பிரிந்திருந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர்.

**மீனம்:-** உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

# ரூ. 183.60 கோடியில் கட்டப்பட்டுள்ள வீட்டு வசதி துறை கட்டிடங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஏப். 12-**

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 171 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில் 10 கோடியே 88 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் சார்பில் ஒரு கோடியே 35 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட மற்றும் நவீனமயமாக்கப்பட்ட கட்டிடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், நகர் ஊரமைப்புத் துறையில் அளவர் / உதவி வரைவாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் அவர் வழங்கினார்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கத்தின் சமுதாயநலக்கூடத்தில் 75 லட்சம் ரூபாய் செலவில் மின்தூக்கி மற்றும் இதர வசதிகளுடன் நவீனமயமாக்கப்பட்ட கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்க சமுதாயக்கூடத்தை முதல்வர் திறந்து வைத்தார்.

# பறவை காய்ச்சலுக்கு முதல் உயிரிழப்பு: சீனாவில் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

**பெய்ஜிங், ஏப். 12-**

சீனாவின் குவாங்டாங் மாகாணம் ஜாங்ஷான் நகரை சேர்ந்த 58 வயது பெண்ணுக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. கடுமையான நிமோனியாவால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அந்தப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த பெண் நோய் பாதிப்புக்கு உள்ளாவதற்கு முன்பு ஒரு கோழிப் பண்ணைக்கு சென்றார் என்றும் அங்கு சேகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாதிரிகளில் பறவை காய்ச்சலுக்கு சாதகமான வைரஸ்கள் இருந்ததும் கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சீனாவில் பறவை காய்ச்சலுக்கு ஏற்பட்ட முதல் உயிரிழப்பு ஆகும். எச்.3.என்.8. வைரஸ் மனிதர்களுக்கும் பரவுவது கடந்த ஒன்றரை ஆண்டுக்கு முன்பு உறு திப் ப டுத் தப் பட் டது. 2022-ம் ஆண்டு மத்திய சீனாவில் 4 வயது சிறுவனுக்கு பறவை காய்ச்சல் தொற்று ஏற்பட்டது. அதில் இருந்து அவன் குணம் அடைந்தான்.

அதன்பின் அதே ஆண்டு மே மாதம் ஹெனான் மாகாணத்தை சேர்ந்த 5 வயது சிறுவன் பாதிக்கப்பட்டான். அவனுக்கு லேசான அறிகுறிகள் மட்டுமே இருந்தன. இதற்கிடையேதான் பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மூன்றாவது நபர் உயிரிழந்துள்ளார். இதையடுத்து சீனாவில் பறவை காய்ச்சல் பரவலை தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சீனாவில் கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இன்று வரை பல நாடுகளில் கொரோனா பாதிப்பு இருந்து வருகிறது. இதில் லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்த நிலையில் சீனாவில் பறவை காய்ச்சலுக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

# கொரோனா தொற்று அதிகரித்தால் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்படும்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

**சென்னை, ஏப். 12-**
தமிழகத்தில் கொரோனா தொற்று அதிகரித்தால் பொது இடங்களில் மக்கள் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருவது குறித்து சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது அவர் பேசுகையில்,

தமிழகத்தில் நேற்று கொரோனா பாதிப்பு 400-ஐ நெருங்கியுள்ளதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அண்டை மாநிலமான கேரளாவில் பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழகம் முழுவதும் மீண்டும் கொரோனா பரிசோதனைகளை தீவிரப்படுத்த வேண்டும். தமிழகம் முழுவதும் பொது இடங்களில் காய்ச்சல் முகாம் நடத்தப்பட வேண்டும். மாஸ்க் அணிவது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை தெரியப்படுத்த வேண்டும். மருத்துவ குழு அமைத்து வீடு வீடாக சென்று பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மருத்துவமனையில் தனி வார்டு அமைக்க வேண்டும். கொரோனா பரவலை தடுக்க தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

அதற்கு பதிலளித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:-

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் மட்டுமில்லை, பிற மாநிலங்களிலும் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. கொரோனா பரவல் தீவிரமாக இல்லை; அதனால் பெரிய அளவிலான பதற்றமான சூழல் இல்லை.

புதிய கொரோனா வைரஸ் லேசான அளவிலான பாதிப்பையே ஏற்படுத்துகிறது. கொரோனா பரவல் அதிகரிப்பதை கருத்தில் கொண்டு பொதுமக்கள் முககவசம் அணிந்து செல்வது நல்லது. கொரோனா பாதிப்பு பெரிய ளவில் இல்லை என்றாலும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கொஞ்சம் கொஞ்சமாக கூடி கொண்டிருப்பதால், இதனை 4-வது அலையாக கருத முடியாது. கொரோனா தொற்று அதிகரித்தால் பொது இடங்களில் மக்கள் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்படும்.

தற்போது வந்திருக்கும் கொரோனா பாதிப்பு உயிர் பறிக்கும் பாதிப்பாக இல்லை. காய்ச்சல், தொண்டை வலி ஆகியவை ஏற்படுகிறது, இதனால் ஆக்சிஜன் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு தேவைப்படவில்லை. பொது மக்கள் முககவசம் அணிய அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் கட்டாயப்படுத்தவில்லை.

ஏப்ரல் 1-ம் தேதி முதல் மருத்துவமனைகளில் முககவசம் கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் எப்படி உருமாறி வந்தாலும் தமிழக மக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் காப்பார். 2,067 மெட்ரிக் டன் ஆக்சிஜன் கையிருப்பை வைத்து கொள்ளும் அளவிற்கு தமிழகத்தில் வசதிகள் உள்ளன. அரசின் விதிமுறைகளை கடைபிடிப்பது அவசியம். தமிழகத்தில் எடுக்கப்பட்ட கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மத்திய அரசு பாராட்டியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# பள்ளிக்கு செல்ல தொடங்கிய சிறுமி டானியா: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை,ஏப். 12-**
சிறுமி டானியா பள்ளிக்கு செல்ல தொடங்கி விட்டதை அறிந்து மகிழ்ந்தேன் என்று முதல்வர் ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். ஆவடி அருகே முகச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை பெற்று, நலம் பெற்ற சிறுமி டானியா மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். சிறுமி டானியா பள்ளிக்கு செல்ல தொடங்கி விட்டதை அறிந்து மகிழ்ந்தேன் என்று முதல்வர் ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். ஆசிரியர்களோடு அன்பான நண்பர்களும் உனது உயர்வுக்கு உறுதுணையாக அமைய வாழ்த்துகிறேன் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அருகே வீராபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஸ்டீபன்ராஜ், இவரது மனைவி சவுபாக்யா இவர்களின் மகள் டானியா அரிய வகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டார். ஆகவே, தனக்கு உதவிக்கரம் நீட்டுமாறு முதல்வருக்கு சிறுமி டானியா கோரிக்கை விடுத்திருந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறுமிக்கு உடனடியாக சிகிச்சையளிக்க உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 51 போலி மருத்துவர்கள் கைது

**சென்னை, ஏப். 12-**
தமிழகத்தில் கடந்த 3 நாட்களில் 51 போலி மருத்துவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் போலி மருத்துவர்கள் அதிகமாக இருப்பதாக வந்த புகார்களை தொடர்ந்து காவல் துறையினரும், மருத்துவ துறையினரும் இணைந்து கடந்த 3 நாட்கள் நடத்திய சோதனையில் மாநிலம் முழுவதும் 51 போலி மருத்துவர்களை கைது செய்துள்ளனர். இதில் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டத்தில் 15 போலி மருத்துவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கேரளா மற்றும் ஆந்திராவில் மருத்துவராக பயில்வதற்கான விதிகள் வேறாக இருப்பதால், சிலர் தமிழக விதிகளுக்கு உட்படாமல் தேனி, திருவள்ளூர் உள்ளிட்ட எல்லை மாவட்டங்களில் சட்ட விரோதமாக மருத்துவர்களாக பணியாற்றி வருவதாக விசாரணையில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற போலி மருத்துவர்களை கண்டறியும் பணிகளை தீவிரப்படுத்த சுகாதாரத்துறை செயலர் உத்தரவிட்டுள்ளார். மேலும் போலி மருத்துவர்களை ஒடுக்க சிறப்பு சோதனையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

# பாகிஸ்தானை விட இந்தியாவில்தான் இஸ்லாமியர்கள் பாதுகாப்பாக உள்ளனர்

## மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேச்சு



**வாஷிங்டன், ஏப். 12-**
பாகிஸ்தானில் வாழும் முஸ்லிம்களை விட இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் சிறப்பாக, பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், ஜி.20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி கவர்னர்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்கவும் அங்கு சென்றுள்ளார்.

இதற்கிடையே வாஷிங்டனில் பீட்டர்சன் இன்ஸ்டிடியூட் பார் இன்டர்நேஷனல் எகனாமிக்சில் நடந்த நிகழ்ச்சியில் நிர்மலா சீதாராமன் பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

இந்தியாவுக்கு முதலீட்டாளர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். முதலீடுகளை பெறுவதில் ஆர்வமுள்ள ஒருவர் என்ற முறையில், களத்தில் கால் கூட வைக்காத நபர்களால் உருவாக்கப்படும் கருத்துக்களை கேட்பதை விட இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதை பார்க்க வாருங்கள் என்று கூறுவேன்.

இந்தியாவில் 2-வது பெரிய முஸ்லிம் மக்கள் தொகை உள்ளது. சிறுபான்மையினரை பாதுகாப்பதாக உறுதியளித்து இஸ்லாமிய நாடாக தன்னை பிரகடனப்படுத்திய போதிலும் பாகிஸ்தானில் உள்ள ஒவ்வொரு சிறுபான்மை குழுவும் எண்ணிக்கையில் குறைந்து விட்டன.

சில முஸ்லிம் பிரிவுகள் கூட அழிக்கப்பட்டுள்ளன. முகாஜிர்கள், ஷியாக்கள் உள்ளிட்ட குழுவிற்கு எதிராக வன்முறை நிலவுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு முஸ்லிம்களும் தங்கள் வியாபாரத்தை செய்கிறார்கள். அவர்களின் குழந்தைகள் படிக்கிறார்கள்.

பாகிஸ்தானில் வாழும் முஸ்லிம்களை விட இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் சிறப்பாக, பாதுகாப்பாக இருக்கிறார்கள். உலக வர்த்தக அமைப்பு இன்னும் முற்போக்கு தனமாக இருக்க வேண்டும். எல்லா நாடுகளின் பேச்சை கேட்டு நியாயமாக இருக்க வேண்டும்.

இந்தியாவில் அடிப்படை வசதிகளை வழங்குவதில் நாங்கள் நிறைவை அடைந்து இருக்கிறோம். அவர்கள் குடியிருக்க நல்ல வீடுகள், கழிப்பறைகள், குடிநீர் குழாய்கள், மின்சாரம், நல்ல சாலை, போக்குவரத்து வசதி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதி சேர்க்கை மூலம் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் வங்கி கணக்கு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய அமைச்சருடன் உக்ரைன் வெளியுறவு மந்திரி சந்திப்பு



**புது டெல்லி, ஏப். 12-**
இந்தியாவுக்கு வந்துள்ள உக்ரைன் வெளியுறவு அமைச்சர் எமின் தபரோவா மத்திய அமைச்சர் மீனாட்சி லேகியை சந்தித்து பேசினார். உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்நிலையில் உக்ரைன் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் எமின் தபரோவா இந்தியாவுக்கு 4 நாள் பயணமாக வந்துள்ளார்.

இந்தியாவுக்கு வந்துள்ள எமின் தபரோவா, இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி, தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்தது. அதன்படி டெல்லியில் நேற்று மத்திய அமைச்சர் மீனாட்சி லேகியை, எமின் தபரோவா நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பு குறித்து மீனாட்சி லேகி தனது டுவிட்டர் பக்கத்தில், இருதரப்பு மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். கலாச்சார உறவுகள் மற்றும் பெண்கள் அதிகாரம் ஆகியவை விவாதத்தில் இடம்பெற்றன. உக்ரைனுக்கு தொடர்ந்து மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஜெய்ஷாவிடம் பேசி எம்.எல்.ஏ.க்களுக்கு ஐ.பி.எல் டிக்கெட் வாங்கி கொடுங்கள்

## கிண்டலாக பதிலளித்த அமைச்சர் உதயநிதி



**சென்னை, ஏப். 12-**
பி.சி.சி.ஐ. தலைமை பொறுப்பில் உள்ள அமித்ஷாவின் மகன் ஜெய் ஷாவிடம் பேசி அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் தலா 5 டிக்கெட் வாங்கி கொடுங்கள் என்று சட்டசபையில் பதிலளித்த அமைச்சர் உதயநிதியின் பேச்சால் சிரிப்பலை எழுந்தது.

தமிழக சட்டசபையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை மானிய கோரிக்கை மீது நேற்று விவாதம் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அ.தி.மு.க. கொறடா எஸ்.பி. வேலுமணி, சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளை காண எம்.எல்.ஏ.க்களுக்கு பாஸ் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஐ.பி.எல் போட்டிகளைப் பார்க்க எம்.எல்.ஏ.க்களுக்கு 400 பாஸ் கொடுக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நான்கு வருடமாக சென்னையில் போட்டியே நடக்கவில்லை, நீங்கள் யாருக்கு எப்போது டிக்கெட் வாங்கி கொடுத்தீர்கள் என்று தெரியவில்லை. நான் எனது சொந்த செலவில் ஒவ்வொரு போட்டிக்கும் எனது தொகுதியில் இருந்து 150 விளையாட்டு வீரர்களுக்கு டிக்கெட் வாங்கி கொடுத்து போட்டியை பார்க்க வைக்கிறேன். மேலும் ஐ.பி.எல். போட்டியை நடத்துவது பி.சி.சி.ஐ. உங்கள் நெருங்கிய நண்பர் அமித்ஷாவின் மகன் ஜெய் ஷாதான் அதற்கு தலைமை பொறுப்பில் உள்ளார். நீங்கள் அவரிடம் பேசி அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் தலா 5 டிக்கெட் வாங்கி கொடுங்கள். நாங்கள் காசு கொடுத்து கூட வாங்கிக் கொள்கிறோம் என்றார். அமைச்சர் உதயநிதியின் பேச்சால் அவையில் சிரிப்பலை எழுந்தது.

கண் தானம் செய்வீர்

# அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மருத்துவமனையில் அனுமதி



**சென்னை, ஏப். 12-**
காய்ச்சல் காரணமாக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அடையார் வீட்டில் அசதியாக இருந்தார். அதன் பிறகு அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது தெரியவந்தது. இதனால் அவர் உடனடியாக சென்னை ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு டாக்டர்கள் உடல் பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை அளித்து வருகின்றனர். அவருக்கு எந்த வகை காய்ச்சல் உள்ளது என்பதை கண்டறிய ரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இன்புளூயன்சா மற்றும் கொரோனா பரிசோதனையும் எடுத்து பார்க்கப்பட்டது. இதில் சாதாரண வகை காய்ச்சல்தான் அவருக்கு உள்ளது என்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து டாக்டர்கள் அவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுகையில், அமைச்சர் கயல்விழி செல்வராஜுக்கு சாதாரண காய்ச்சல் தான். எனவே நாளை(இன்று) டிஸ்சார்ஜ் ஆக வாய்ப்புள்ளது என்று தெரிவித்தார்.

# பா.ஜ.க.விற்கு ஒருபோதும் பயப்பட மாட்டேன்: வயநாட்டில் ராகுல் காந்தி பேச்சு

**வயநாடு, ஏப். 12-**
பா.ஜ.க.விற்கு ஒருபோதும் பயப்பட மாட்டேன் என்று வயநாட்டில் ராகுல் காந்தி பேசினார்.

அவதூறு வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதால் ராகுல் காந்தியின் வயநாடு தொகுதி எம்.பி பதவி பறிக்கப்பட்டது. சூரத் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி மேல் முறையீடு செய்துள்ளார்.

இந்த நிலையில் எம்.பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட பிறகு நேற்று முதல் முறையாக ராகுல் காந்தி வயநாடு தொகுதிக்கு சென்றார். அங்கு தனது சகோதரி பிரியங்கா காந்தியுடன் இணைந்து பேரணியாக ராகுல் காந்தி சென்றார்.

ராகுல் காந்திக்கு வயநாடு தொகுதி மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் வயநாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி பேசியதாவது,

பாரதிய ஜனதாவிற்கு ஒருபோதும் பயப்பட மாட்டேன். எனக்கு எதிராக எது நடந்தாலும் நான் நானாக இருப்பேன். வயநாடு தொகுதி எம்.பியாக இருந்தாலும், இல்லாவிட்டலும் மக்களுக்காக போராடுவேன்.

நாட்டில் எத்தனையோ பேர் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். அதில் நானும் ஒருவன். என்னை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் வயநாடு தொகுதி மக்களுடன் இருப்பேன் என்றார்.

# திரிணாமுல் எம்.பி. பலேரோ ராஜினாமா



**புது டெல்லி, ஏப். 12-**
திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.பி. லூயிசின்ஹோ பலேரோ, நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அதை தொடர்ந்து அவர் தனது ராஜினாமா கடிதத்தை பாராளுமன்ற மாநிலங்களவை தலைவர் ஜகதீப் தன்கரிடம் வழங்கினார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.யும், கோவாவின் முன்னாள் முதல்வருமான லூயிசின்ஹோ பலேரோ, தனது மாநிலங்களவை எம்.பி. பதவியை நேற்று ராஜினாமா செய்தார். மேலும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகுவதாகவும், தற்சமயம் வேறு எந்த கட்சியிலும் இணையப் போவதும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். மேலும் அவர் தனது ராஜினாமா கடிதத்தை நேற்று மாநிலங்களவை தலைவர் ஜகதீப் தன்கரிடம் வழங்கினார். கடந்த 2022-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் கோவா பார்வேர்டு கட்சியைச் சேர்ந்த விஜய் சர்தேசாய்க்கு எதிராக போட்டியிட லூயிசின்ஹோ பலேரோ மறுப்பு தெரிவித்ததாகவும், இதனால் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி மேலிடம் அவர் மீது அதிருப்தியில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

# நடத்தையில் சந்தேகம்: 65 வயது மனைவி மீது ஆசிட் வீசிய முதியவர் கைது

**மும்பை, ஏப். 12-**
மும்பை அருகே உள்ள வடலா பகுதியில் 75 வயது நபர் தனது 65 வயது மனைவியுடன் வசித்து வந்தார். இதனிடையே, முதியவருக்கு தனது மனைவியின் நடத்தையில் சந்தேகம் எழுந்துள்ளது. இதனால், இருவருக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம் ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை கணவன் மனைவி இடையே மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது தன் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட 75 வயது முதியவர் வீட்டில் இருந்த ஆசிட்டை தனது 65 வயதான மனைவியின் முகத்தில் வீசியுள்ளார்.

இதில், அந்த பெண்ணின் முகத்தில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து, அந்த பெண்ணை மீட்ட அக்கம்பக்கத்தினர் அவரை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் மனைவி மீது ஆசிட் வீசிய முதியவரை கைது செய்தனர். ஆசிட் வீச்சில் காயமடைந்த அந்த பெண் மருத்துவமனையில் சிகிச்சைக்கு பின் வீடு திரும்பினார்.

# சென்னை மற்றும் மதுரை ஐகோர்ட் பகுதிகளில் டிரோன்கள் பறக்க தடை

**சென்னை, ஏப். 12-**
சென்னை ஐகோர்ட் மற்றும் ஐகோர்ட் மதுரை கிளை பகுதிகளில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை நாட்களில் சினிமா மற்றும் பொது நிகழ்ச்சிக்கு ஐகோர்ட்டை டிரோன்கள் மூலம் படம் பிடிப்பதாக புகார் அளிக்கப்பட்ட நிலையில் ஐகோர்ட் தலைமை பதிவாளர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அதை ஒரு பதிவுதுறை உத்தரவாக பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐகோர்ட் என்பது ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி. ஒரு தொல்லியல் தொடர்புடைய பகுதி என்ற அடிப்படையில், இதன் மேல் டிரோன்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்ட பகுதியாக தற்போது பதிவாளர் அறிவித்திருக்கிறார்.

இதை உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வு மட்டுமல்லாமல், மதுரையில் இருக்கக்கூடிய மதுரை கிளையும் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்ட பகுதியாக உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. பதிவாளர் வெளியிட்ட அறிவிப்பில் இது தடை செய்யப்பட்ட பகுதி என்ற அறிவிப்பு மட்டும் தான் வெளியிடப்பட்டுருக்கிறது, அதை மீறி ட்ரோன்கள் மூலம் படப்பிடிப்பு நடத்தினால் எந்தவிதமான நடவடிக்கை எடுக்கலாம் யாரிடம் புகார் அளிக்கலாம் என்ற தொடர்பாக காவல்துறையினருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு இருக்கிறது.

அதன் மூலம் உயர் நீதிமன்றத்தில் இருந்து பதிவுத்துறை மூலமாக ஒரு புகார் அளிக்கும் பட்சத்தில் உயர்நீதிமன்றத்தில் அருகில் இருக்கக்கூடிய காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அவர்கள் மூலமாக சமத்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், வழக்குப்பதிவு செய்து கைது செய்வதற்கும் வாய்ப்புள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

# அடுத்த வாரம் கலாஷேத்ரா மாணவர்களிடம் விசாரணை

## மாநில மனித உரிமை ஆணையம் திட்டம்

**சென்னை, ஏப். 12-**
கலாஷேத்ரா விவகாரம் தொடர்பாக மாணவர்களிடம் அடுத்த வாரம் விசாரணை நடத்த மாநில மனித உரிமைகள் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

கலாஷேத்ரா மையத்தில் பயிலும் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு அளிக்கப்பட்டதாக மாணவிகள் பல்வேறு கட்ட போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக பேராசிரியர் ஹரி பத்மன் என்பவரை அடையாறு மகளிர் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து மாநில மகளிர் ஆணையம் விசாரணை நடத்தி தமிழக அரசிடம் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. தற்போது இந்த விவகாரத்தை மாநில மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்தது.

பின்னர், மனித உரிமைகள் ஆணையத்தின் புலனாய்வு பிரிவு ஐ.ஜி., பாதிக்கப்பட்ட மாணவிகள் மற்றும் நிர்வாகத்திடம் விசாரணை நடத்தி 6 வாரத்தில் விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், கலாஷேத்ரா கல்லூரியில் மாநில மனித உரிமைகள் ஆணைய 4 அதிகாரிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) நேரில் சென்று விசாரணை நடத்தினர். கல்லூரி இயக்குனர் ரேவதி ராமச்சந்திரன், துணை இயக்குனர் பத்மாவதி, முதல்வர் பகல ராம்தாஸ் ஆகியோரிடம் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக கலாஷேத்ரா கல்லூரி மாணவ, மாணவிகளிடம் அடுத்த வாரம் விசாரணை நடத்த மாநில மனித உரிமைகள் ஆணையம் திட்டமிட்டுள்ளது. தற்போது தேர்வு நடைபெறுவதால் தேர்வு முடிந்த பிறகு அடுத்த வாரம் விசாரணை நடத்தப்படும் என ஆணைய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் அமல்:

# கேம் பட்டியலை தயாரிக்கும் பணியில் அதிகாரிகள் தீவிரம்

**சென்னை, ஏப். 12-**
ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் அமலானதை தொடர்ந்து தடை செய்ய வேண்டிய கேம் பட்டியலை தயாரிக்கும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆன்லைன் சூதாட்ட தடைச்சட்டம் அரசிதழில் வெளியானதை தொடர்ந்து அச்சட்டதை அமல்படுத்தும் பணிகளை தொடங்கியது. முதற்கட்டமாக ஆன்லைன் சூதாட்ட செயலி, இணையதளங்களை கணக்கெடுக்கும் பணிகளை சென்னை சைபர் கிரைம் தொடங்கி உள்ளது. இது குறித்து காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் சைபர் கிரைம் பிரிவு அதிகாரிகள் ஓரிரு நாட்களில் ஆலோசனை நடத்த உள்ளனர்.

.தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக ஆன்லைன் சூதாட்டத்தில் இளைஞர்கள், தொழில் அதிபர்கள், இன்ஜினியர்கள், பெண்கள் என பல தரப்பினரும் ஈடுபட்டு பல லட்சம் ரூபாய் மற்றும் சொத்துக்களை இழந்தனர்.

இதனால் இதுவரை 46-க்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

இந்நிலையில் ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் அமலானதை தொடர்ந்து தடை செய்ய வேண்டிய கேம் பட்டியலை தயாரிக்கும் பணி தீவிரமடைந்துள்ளது. சூதாட்ட தடைச் சட்டத்தின்படி தடை செய்யப்பட வேண்டிய கேம் பட்டியலை காவல் தயார் செய்து வருகிறது. ஆன்லைன் சூதாட்ட தடைச்சட்டம் அரசிதழில் வெளியானதை அடுத்து அச்சட்டதை அமல்படுத்தும் பணிகளை தொடங்கியது.

# பா.ஜ.க. பதில் கூற முடியாத கேள்வியை கேட்டதற்காக ராகுல் தகுதி நீக்கம்

## வயநாட்டில் பிரியங்கா காந்தி பேச்சு

**வயநாடு, ஏப். 12-**
பா.ஜ.க. பதில் கூற முடியாத கேள்வியை கேட்டதற்காக ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார் என பிரியங்கா காந்தி பேசினார். கேரளாவின் வயநாடு தொகுதியின் முன்னாள் எம்.பி.யான ராகுல் காந்தி தகுதி நீக்கத்திற்கு பின்னர், முதன்முறையாக வயநாடு தொகுதிக்கு நேற்று சென்றார். அவருடன் அவரது சகோதரி மற்றும் கட்சியின் உத்தர பிரதேச பொது செயலாளரான பிரியங்கா காந்தியும் சென்றார். இந்த பயணத்தின்போது, பொது கூட்டம் ஒன்றில் பிரியங்கா காந்தி கட்சி தொண்டர்கள் மற்றும் மக்களிடையே உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது,

பா.ஜ.க. பதில் கூற முடியாத கேள்வி ஒன்றை கேட்டதற்காக ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். ஒட்டு மொத்த அரசும் கவுதம் அதானியை பாதுகாக்க முயற்சித்து வருகிறது. பிரதமரும் அதானியை பாதுகாத்து வருகிறார்.

பிரதமர் மோடி ஒவ்வொரு நாளும் உடையணியும் முறையை மாற்றி கொண்டிருக்கிறார். ஆனால், பொது மக்களின் வாழ்க்கை முறையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்று பேசினார்.



தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை டெல்லி சிறப்பு பிரதிநிதி விஜயன், எம்.எல்.ஏக்கள் சிந்தனைசெல்வன், இ.ராஜா, ஏ.வெங்கடேசன், வி.அமுலு, க.சிவகாமசுந்தரி, சதன் திருமலைக்குமார் ஆகியோர் சந்தித்து சுதந்திர போராட்ட வீரர் வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்ட விசுவநாதப்பேரியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தனர்.

# இந்திய ஆப்பிரிக்க கானாநாட்டின் வர்த்தக ஆணையாளராக மேலூர் அருண்ராஜா பெரியசாமி பதவிஏற்றார்




**மதுரை ஏப் 12**

மதுரை மாவட்டம், மேலூர் அருகே உள்ள சூரக்குண்டு கிராமத்தைச் சேர்ந்தவர் பெரியசாமி என்ற துரைப்பாண்டி தொழிலதிபர் இவரது மகன் அருண் ராஜா இந்திய ஆப்பிரிக்கா கானா நாட்டின் வர்த்தக ஆணையாளராக பதவி ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சி மதுரை மாரியட் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் இந்தியாவுக்கான கானா உயர் ஆணையர்.குவாகு அசோகா சேரம், மந்திரி ஆலோசகர் கானா நாட்டின் உயர் கமிஷன் அ ட் ஜே எர்னெஸ்ட் நானா .கானா நாட்டின் பிரத்தியக அமைச்சர் ஜார்ஜ் யாவ் போக்கி பிராந்திய அமைச்சர் கோசி அடுகியான் ஐ ஏ டி சி தலைவர் ஆசிப் இக்பால் இந்தியா ஆப்பிரிக்கா வர்த்தக நிர்வாக இயக்குனர் பீட்டர் மென்சா மதுரை மாவட்ட ஆட்சியர் அனீஸ் சேகர், நகராட்சி நிர்வாக இயக்குனர் பொன்னையா, புலம் பெயர்ந்தோரின் பாதுகாவலர் வெளியுறவு அமைச்சகம் இந்திய அரசு வெங்கடாசலம் மாவட்ட துணை கண்காணிப்பாளர் ஆர்லியஸ் ரிபோனி மற்றும் கானா நாட்டின் நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள் இதில் கலந்து கொண்டனர்..

# பரமக்குடி நகராட்சியின் சார்பில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்கம்



**பரமக்குடி.ஏப்.12.**

தமிழக முதல்வரின் ஆணைக்கிணங்க, நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கத்தின் மூலம் மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் ஒட்டு மொத்த கூட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டு தூய்மை பணிகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தி ஒ ராண்டு நிறைவடைந்தது.

தமிழக அரசின் சார்பில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு தூய்மை பணிகள் தொடங்க அறிவுறுத்தப் பட்டது.

அதன் அடிப்படையில் நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி, தலைமையில்,ஆணையாளர் திருமால் செல்வம் முன்னிலையில் முத்தாலம்மன் கோவில், தினசரி சந்தை மற்றும் சேவை சாலையில் ஒட்டுமொத்த கூட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ஒட்டுமொத்த கூட்டுப் பணி மேற்கொள்ளப்பட்ட இடங்களில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வழங்குவது, பொது இடங்களில் குப்பைகளை கொட்டாமல் இருப்பது குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் நகர் மன்ற உறுப்பினர்கள் ஜீவரத்தினம்,கவிதா மற்றும் தன்னார்வலர்கள்,நகராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியை சுகாதார ஆய்வாளர்கள் தினேஷ்குமார், ஜெகதீஷ், மதன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# அரசின் நலத்திட்ட உதவிகள் பெற விவசாயிகள் வேளாண் அடுக்கு வலைதளத்தில் பதிவு அழைப்பு

## உதவி இயக்குனர் ஜெயலட்சுமி அறிவிப்பு

**ஒட்டன்சத்திரம்.ஏப்.12**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் அரசின் நலத்திட்ட உதவிகளை பெற வேளாண்மைத்துறையின் அடுக்கு வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என ஒட்டன்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது, விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. அதேபோல் மத்திய அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்களை பெற தாங்கள் விபரங்களை வேளாண்மைத்துறையின் அடுக்கு வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும். ஒட்டன்சத்திரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் தங்கள் நிலத்தில் பயிரிடப்படும் பயிர்களுக்கு மானியமும், அரசு உதவியும் இயற்கை பேரிடர் ஏற்பட்டு, பயிர்களில் இழப்பு ஏற்படும் பொழுது, அதற்குரிய நிவாரணங்கள் பெற மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளும் அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதனை எளிதாக பெறும் வகையில், வேளாண் அடுக்கு திட்டத்தினை வேளாண்மைத்துறை வழியாக சம்மந்தப்பட்ட துறைசார்ந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும் வகையில், அடுக்கு வலைதளத்தில் விவசாயிகளுடைய நிலஉடமை மற்றும் விபரங்கள் தொடர்பான பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டு, வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிகள் வேளாண்மைத்துறையில் ரெட்டியபட்டி, கொல்லபட்டி, தா.புதுக்கோட்டை, வலையபட்டி, காளாஞ்சிபட்டி கிராம விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்களை சந்தித்து, தங்களது ஆதார் நகல், புகைப்படம், வங்கி கணக்கு புத்தக நகல், நிலம் சம்மந்தப்பட்ட சிட்டா, பட்டா ஆகியவற்றுடன் வேளாண் உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டு, தங்கள் விபரங்களை சரிபார்த்து பதிவு செய்வதால், அரசின் நலத்திட்டங்களை காலதாமதமின்றி பெறாலம் என்று தெரிவித்துள்ளார்.

# மீனாட்சிபுரம் காளியம்மன் கோவில் திருவிழா



**நத்தம், ஏப்.12**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மீனாட்சிபுரத்தில் உள்ள காளியம்மன் கோவில் திருவிழா கடந்த 3-ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. இதில் கரந்த மலை கன்னிமார் தீர்த்தம் அழைத்து வரப்பட்டு பின்னர் அன்று இரவு அம்மன்குளத்தில் இருந்து ஊர்வலமாக கரகம் கோவிலுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி நடந்தது.

தொடர்ந்து தோரணமரம் ஊன்றும் நிகழ்ச்சி நடந்தது. பின்னர் பக்தர்கள் அரண்மனை மாவிளக்கு, பால்குடம்,அக்கினி சட்டி .சந்தனகுடம் , முளைப்பாரி, எடுத்து தங்களது நேர்த்திக் கடன்களை செலுத்தினர். தொடர்ந்து கரகம் அம்மன் குளத்திற்கு செல்லும் நிகழ்ச்சி நடந்தது. இன்று அம்மன் மஞ்சள் நீராடுதலுடன் திருவிழா நிறைவுபெறுகிறது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். திருவிழா ஏற்பாடுகளை மீனாட்சிபுரம் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# சிவகாசி மாரியம்மன் கோவிலில் கயிறு குத்து திருவிழா

**விருதுநகர் ஏப். 12.**

சிவகாசி திருத்தங்கள் மாரியம்மன் கோயில் கோயில்களில் பங்குனி பொங்கல் திருவிழாவை முன்னிட்டு கயர் குத்து திருவிழா நடந்தது. சிவகாசி, திருத்தங்கள், மாரியம்மன் கோயில் களில் பங்குனி பொங்கல் திருவிழா ஏப்ரல் 2 கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவிழா நாட்களில் தினமும் அம்மன் சிம்மம், காமதேனு, வேதாளம், உள்ளிட்ட வாகனங்களில் வீதி உலா வந்து பொதுமக்களுக்கு அருள் பாலிப்பார். நேற்றைய முன் தினம் பொங்கல் வைத்து பக்தர்கள் வழிபட்டனர். 9. நாள் திருவிழாவான நேற்று இரு கோவில்களிலும் கயிறு குத்து திருவிழா நடைபெற்றது. பக்தர்கள் கரும்புள்ளி செம்புள்ளி குத்தியும், அக்னிசட்டி எடுத்தும், உருண்டு கொடுத்தும், மாவிளக்கு எடுத்தும், கரும்புத் தொட்டில் கட்டி நேர்த்திக்கடன் செலுத்தினர். சிவகாசியில் அம்மன் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதி வழம் வந்து அரிசி கொட்டகை மண்டபத்தில் வீட்டிலிருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திருவிழாவை முன்னிட்டு சிவகாசி திருத்தங்கள் பகுதியில் பட்டாசு உள்ளிட்ட ஆலைகளுக்கு கல்லூரிகளுக்கும் உள்ளூர் விடுமுறை விடப்பட்டிருந்தது.

# சிவகாசியில் வழிப்பறி செய்த வாலிபருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை

**விருதுநகர் ஏப். 12.**

சிவகாசி அருகே சாட்சியாபுரம் வி.எஸ்.கே.டி. நகரை சேர்ந்தவர் கண்மணி . இவர் 2017 டிச. 16 ல் காமராஜர் ரோட்டில் உள்ள தனது மெடிக்கல் கடையை பூட்டிவிட்டு வரும்போது மர்ம நபர்கள் அவர் கழுத்தில் இருந்த எட்டரை பவுன் தங்கச் செயின், கைப்பையை பறித்து தப்பினர். டவுன் போலீசார் விசாரித்து செயின் பறிப்பில் ஈடுபட்டதாக சாட்சியாபுரம் ஆசாரி காலனியைச் சேர்ந்த அழகுராஜா, மகேஸ்வரன், முருகன், ஆகியோரை கைது செய்தனர். இந்த வழக்கு சிவகாசி நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ராஜேஷ் கண்ணன் நகை பறிப்பில் ஈடுபட்ட அழகுராஜாவிற்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ. ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். மகேஸ்வரன், முருகன் விடுதலை செய்யப்பட்டனர். .

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி சுற்றுலாவுக்கு தேர்வு

**விருதுநகர் ஏப். 12.**

மாநில அளவிலான இலக்கிய மன்ற பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்று வெளிநாடு சுற்றுலா செல்ல பள்ளிக்கல்வித் துறை மூலம் அழைத்துச் செல்வது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் நடைபெற்ற போட்டியில்விருதுநகர் மாவட்டம் ஆவடியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஒன்பதாவது வகுப்பு மாணவி நவீரா பர்வீன் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவியை தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவ மாணவிகள் அனைவரும் பாராட்டினர். விருதுநகர் மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒரு மாணவி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பணியின் போது உயிரிழந்த காவல் ஆய்வாளர் சிவா உடலுக்கு 21 குண்டுகள் முழங்க அஞ்சலி

**திருமங்கலம்.ஏப்ரல்.12.**



திருச்சியில் பணியின் போது உயிரிழந்த உளவுப்பிரிவு காவல் ஆய்வாளர் சிவாவின் உடலுக்கு திருமங்கலம் அருகே 21 குண்டுகள் முழங்க தமிழக காவல் துறையின் சார்பில் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே மேல உரப்பனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் குண்டுமணி. இவரது மகன் சிவா திருச்சியில் உளவுப் பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம்பணியின் போது சிவா மாரடைப்பால் திடீரென உயிரிழந்தார்.இதையடுத்து அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் சொந்த ஊரான மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள மேலஉரப்பனூர் கிராமத்திற்கு நேற்று மதியம் கொண்டு வரப்பட்டது. பின்னர் உறவினர்கள், பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து திருமங்கலம் டிஎஸ்பி வசந்தகுமார் மலர் வளையம் வைத்து காவல் துறையின் சார்பில் அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவரது உடல் ஊர் வழக்கப்படி மேல உரப்பனூர் மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு மதுரை மாவட்ட ஆயுதப்படை போலீசார் 21 குண்டுகள் முழங்க இறுதி அஞ்சலி செலுத்தினர். பின்னர் அவரது மகன்கள் அவருக்கு இறுதிச் சடங்குகள் செய்தனர்.

# அலங்காநல்லூர் அருகே புதுப்பட்டியில் ஜல்லிக்கட்டு விழா



**அலங்காநல்லூர், ஏப்.12-**

மதுரைமாவட்டம்,அலங்காநல்லூர், அருகே அ.புதுப்பட்டியில் உள்ள பால மரத்தம்மன் - சுந்தரவள்ளி அம்மன் கோவில் பங்குனி திருவிழாவையொட்டி ஜல்லிக்கட்டு விழா நேற்று காலையில் அரசு வழிகாட்டுதல்படி தொடங்கியது, இதில் வீரர்கள் உறுதி மொழி எடுத்து கொண் டனர். தொடர்ந்துமாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சுகி பிரேமலா கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் வாடிப்பட்டி வட்டாட்சியர் வீரபத்திரன் .முதலில் கிராம கோவில் மாடுகள் வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்டது. அதை வீரர்கள் யாரும் பிடிக்கவில்லை. அதன் பின்னர் சீறி பாய்ந்து வந்த முரட்டு காளைகளை வீரர்கள் மடக்கி பிடித்தனர். பல காளைகள் ,வீரர்களின் பிடியில் சிக்காமல் சவால் விட்டு சிட்டு போல் பறந்து சென்றன. வாடிவாசல் முன்பாக, வீரர்களுக்கும், காளைகளுக்கும் பாதுகாப்பாக தென்னை நார் மஞ்சிகள் விரிக்கப்பட்டிருந்தன. இந்த ஜல்லிக்கட்டு விழாவைக் காண சுற்றுவட்டாரங்கள், வெளி மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வந்து கலந்து கொண்டு விழாவை பார்த்து ரசித்தனர். இது போக மைதானத்தின் இருபுறமும் அமைக்கப்பட்டிருந்த காலரிகளில் பார்வையாளர்கள் கூட்டம் கூட்டமாக குவிந்து பார்த்து ரசித்தனர்'.

மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, தஞ்சாவூர், ராமநாதபுரம், விருதுநகர், திருச்சி, உள்ளிட்ட பல மாவட்ட பகுதிகளில் சுமார் 900 காளைகள், முதல் நாளே, வேன், லாரி, மூலம் வந்து கலந்து கொண்டன.

மருத்துவ பரிசோதனைக்கு பிறகே, காளைகளக்கும், மாடுபிடிவீரர்களுக்கும் பந்தயத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது,

காயம் 19 பேர் - மதுரையில் 4 பேர் அனுமதி .: எஸ் பி சிவபிரசாத், தலைமையில், டிஎஸ்பி பாலசுந்தரம், இன்ஸ்பெக்டர் சங்கர் கண்ணன் உள்ளிட்ட 600 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். காளைகள் - 725 மாடுபிடி வீரர்கள் 335

சிறந்த மாடுபிடி வீரர்களுக்கும், பிடிபடாத மாட்டின் உரிமையாளர்களுக்கும், தங்கம், வெள்ளி காசுகளும், மிக்சி, மின்விசிறி, டிவி, வாசிங் மிஷன், குக்கர்,சில்வர், பித்தளை பாத்திரங்கள், சைக்கிள், பிளாஸ்டிக் சேர், சுமை பை, உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 3.30 மணிக்கு ஜல்லிக்கட்டு நிறைவு பெற்றது .இதில் மாடு முட்டி 13 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு அலங்காநல்லூர்,அய்யங்கோட்டை அரசுமருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர்' மதுரை அரசு மருத்துவ மனைக்கு மேல் சிகிச்சைக்காக வலசை பெரிய மொண்டி (22) அரியூர் கோபி (20) பாலமேடு அன்புராஜ் (25) அவனியாபுரம் விஜய் (21) ஆகிய 4 பேரும் அனுப்பி வைக்கப்பட்டனர். ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடுகளை அ.புதுப்பட்டி கிராம பொது மக்கள், பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட காவல் துறை உத்தரவின் பேரில் அலங்காநல்லூர் போலீசார் செய்திருந்தனர்.

# திருமங்கலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் நீர்-மோர் பந்தல்கள்: மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திறந்து வைத்தார்



**திருமங்கலம்.ஏப்ரல்.12.**

திருமங்கலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் மேலக்கோட்டை,மறவன்குளம், கப்பலூர் உச்சப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த நீர்-மோர் பந்தல்களை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திறந்து வைத்து பொது மக்களுக்கு பழங்களையும் இளநீர்,சர்பத்,மோர்,பழரசம், துளசி தண்ணீர் போன்றவற்றை மண்குவளைகளிலும் வழங்கினார்.

தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.இதனையடுத்து தாகத்தினால் மக்கள் தவித்திடாத வகையில் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நீர் மோர் பந்தல்களை அமைத்திடுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கட்சியினருக்கு உத்தரவிட்டிருந்தார்.அதன்படி மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து இடங்களிலும் தி.மு.க.வினர் நீர்-மோர் பந்தல்களை திறந்து வருகின்றனர்.இதன் ஒருபகுதியாக மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மேலக்கோட்டை,மறவன்குளம்,உச்சப்பட்டி,கப்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களின் தாகம் தீர்த்திடும் வகையில் நீர்-மோர் பந்தல்கள்; அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு திருமங்கலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் டி.தங்கப்பாண்டி தலைமை வகித்தார்.மாவட்ட மகளிரணி அமைப்பாளர்,மாவட்ட கவுன்சிலர் கிருத்திகா தங்கப்பாண்டி முன்னிலை வகித்தார்.ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நீர் மோர் பந்தல்களை திறந்து வைத்து பழங்களையும், இளநீர், சர்பத், மோர்,துளசி தண்ணீர் மற்றும் பழரசபானங்களை சுற்றுச்சூழலை பாதிக்காத மண் குவளைகளில் வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.

இவ்விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர் போர்ட் பாண்டியன்,மாநில விவசாய அணி இணைச் செயலாளர்,முன்னாள் எம்.எல்.ஏ.,ம.முத்துராமலிங்கம், மதுரை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் நாகராஜன், மாவட்ட துணைச் செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ.,லதாஅதியமான்,திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார்,துணை தலைவர் ஆதவன் அதியமான், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்இரா.முத்துக்குமார்,பொதுக்குழு உறுப்பினர் சிவமுருகன் கட்சி நிர்வாகிகள் கருவேலம்பட்டி வெற்றி,கப்பலூர் சந்திரன்,ரஞ்சித்,சேட்,பாரதி மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டை அருகே ரேஷன் கடைக்கு அனுப்பும் அரிசி ஆலையில் கலெக்டர் ஜெயசீலன்ஆய்வு



**அருப்புக்கோட்டை.ஏப். 12.**

அருப்புக்கோட்டை அருகே கோபாலபுரம் கிராமத்தில் விஸ்வேஸ்வரா அரிசி ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த அரிசி ஆலையில் அரசு ஒப்பந்தம் மூலம் நெல்லில் இருந்து அரிசி பிரித்தெடுக்கப்பட்டு கூட்டுறவு துறைக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்நிலையில் இந்த அரிசி ஆலையில் அரிசி பிரித்தெடுக்கும் முறைகள் குறித்தும் தரமான முறையில் பணிகள் நடைபெறுகிறதா என்பது குறித்தும்

மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் நேரில் பார்வையிட்டு திடீர் ஆய்வு செய்தார். அரிசி ஆலையில் பாய்லர், ட்ரையர் , அரவை யூனிட் , பேக்கிங் யூனிட் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார் ஒவ்வொரு இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்தும் பணியாளர்களின் பாதுகாப்பு முறைகள் குறித்து ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் மத்திய அரசு வழங்கும் செறிவூட்டப்பட்ட அரிசி 100 கிலோவிற்கு ஒரு கிலோ வீதம் என்ற வீதத்தில் சரியான முறையில் கலக்கப்படுகிறதா எனவும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வட்டாட்சியர் அறிவழகன், கூட்டுறவு துறை அதிகாரிகள் வருவாய்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர். அரசிஆலையில் நெல்லில் இருந்து அரிசியாக பிரித்தெடுக்கப்படும் முறைகள் குறித்து ரைஸ்மில் உரிமையாளர் ரவிச்சந்திரன் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விளக்கி கூறினார்.

# புதுச்சேரி உள்கட்ட அமைப்புக்கு நபார்டு வங்கி ரூ.116 கோடி கடனுதவி

## முதல்வர் ரங்கசாமியுடன் வங்கி அதிகாரிகள் சந்திப்பு



**புதுச்சேரி ஏப். 12,**

புதுச்சேரி மாநிலத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மேம்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் நபார்டு வங்கியுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதுச்சேரி மாநிலத்தில் 2022-23ஆம் நிதியாண்டில் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக நபார்டு வங்கியானது சுமார் ரூ. 116.47 கோடி அளவிற்கு அனுமதி வழங்கியது.

இதில் ரூ.50.25 கோடி அளவிற்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நபார்டு வங்கி அதிகாரிகள் இன்று முதலமைச்சர் ந. ரங்கசாமியை நேரில் சந்தித்து, கடந்த ஆண்டைப் போலவே நடப்பு நிதியாண்டிலும் புதுச்சேரி மாநிலத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கான நிதியை வழங்க தயாராக உள்ளதாகத் தெரிவித்தனர். அப்போது முதலமைச்சர் அவர்கள், நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட உள்ள வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டங்களைத் தயாரித்து அனுப்புவதாகவும் கடந்த ஆண்டை விட அதிக நிதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இந்தச் சந்திப்பின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் க. இலட்சுமிநாராயணன், நிதிச் செயலர் M. ராஜூ, ஆகியோர் உடனிருந்தனர்.



**புதுச்சேரிநலவழித்துறைமற்றும்வில்லியனூர்ஆரம்பசுகாதாரநிலையம்சார்பில்உலகசுகாதார தினத்தை முன்னிட்டு ராக் கல்லூரியின் மாணவ,மாணவிகளின் விழிப்புணர்வு பேரணியை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா சிவா தொடங்கி வைத்தார். அருகில் கிராமப்புற செவிலியர் விஜயலட்சுமி, வில்லியனூர் தலைமை மருத்துவ அதிகாரி திலகம், சுகாதார மேற்பார்வையாளர் சாய்ரா பானு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.**



**புதுச்சேரி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒர்லயன்பேட்டை திமுகபொறுப்பாளர்எஸ்.கோபால்கலந்துகொண்டுநலத்திட்டஉதவிகளைபொதுமக்களுக்கு வழங்கினார். அருகில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் ஜிகினி முகமத் அலி உள்ளார்.**



**புதுச்சேரியில் மகாத்மா ஜோதிராவ் கோவிந்த ராவ் போலே 145வது பிறந்த தினத்தை முன்னிட்டு பாஜக சார்பில் ஓ.பி.சி. அணி சார்பில் சிறப்பு அழைப்பாளராக பாஜக தலைவர் சாமிநாதன், செல்வகணபதி எம் பி, எம்எல்ஏக்கள் வெங்கடேசன், ராமலிங்கம் ஆகியோர் மலர் தூவி மலர் மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் ஓபிசி அணி நிர்வாகிகள், மாநில பொது செயலாளர் மோகன் குமார், துணைத்தலைவர் செல்வம், உட்பட ஏராளமான பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

# ஸ்ரீரங்கபூபதி நர்சிங் கல்லூரி சார்பில் உலக சுகாதார விழிப்புணர்வு



**செஞ்சி,ஏப் 12.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்துள்ள ஆலம்பூண்டியில் இயங்கி வரும் ஸ்ரீரங்கபூபதி மற்றும் ஸ்ரீபதி பார்மசி கல்லூரி மற்றும் செஞ்சி அரசு மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய உலக சுகாதார தின விழிப்புணர்வு நடைபயணம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி அலுவலகம் முன் இருந்து துவங்கிய இந்த விழிப்புணர்வு பேரணியை செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்மஸ்தான் கொடியசைத்து துவக்கி வைத்தார். ஸ்ரீரங்கபூபதி கல்லூரியின் செயலர் வழக்குரைஞர் ஆர்.பி.ஸ்ரீபதி முன்னிலை வகித்தார். நர்சிங் கல்லூரி முதல்வர் மேனகாகாந்தி, பார்மசி கல்லூரி முதல்வர் ராஜேஷ் ஆகியோர் வரவேற்றனர்.

ஊர்வலத்தில் நர்சிங் கல்லூரி மற்றும் பார்மசி கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு உலக சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி கோஷமிட்டவாறு பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். பேரணி செஞ்சி பேரூராட்சி அலுவலகம் முன் தொடங்கி செஞ்சி காந்தி பஜார் மற்றும் கூட்டு சாலை வழியாக அரசு மருத்துவமனையை அடைந்தது. செஞ்சி காவல் ஆய்வாளர் பார்த்தசாரதி, போக்குவரத்து காவல் ஆய்வாளர் அப்பாண்டைராஜ், பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, உறுப்பினர்கள் அஞ்சலை நெடுஞ்செழியன், சிவகுமார், செஞ்சி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், நர்சிங் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்டோர் பேரணியில் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## கடலூர் மாவட்டத்தில்

# ஊரக வளர்ச்சித்துறையின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள்

## கலெக்டர் கி.பாலசுப்ரமணியம் நேரில் ஆய்வு



**கடலூர் ஏப். 12,**

கடலூர் மாவட்டம் நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் வாயிலாக மேற் கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து கலெக்டர் கி.பாலசுப்ரமணியம் ஆய்வு மேற்கொண்டார்.

நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வண்ணாத்தூர் ஊராட்சியில் பிரதான் மந்திரி ஆவாஸ் கிராம யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் வடிகால் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதையும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அன்னைபுடையான் குளம் மறுசீரமைப்பு பணி நடைபெறவுள்ளதையும் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வீடு கட்டுமான பணிகள் நடை பெறு வதையும் மேலும் அவ்ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து மேலும் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் மற்றும் உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். தொடர்ந்து வண்ணாத்தூர் ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.31.26 லட்சம் மதிப்பீட்டில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருவதையும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.14.98 லட்சம் மதிப்பீட்டில் வடிகால் வசதியுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இளங்கியனூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் வடிகால் வசதியுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கப் படுவதையும் தொடர்ந்து அவ்ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.18.14 லட்சம் மதிப்பீட்டில் வடிகால் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.பின்னர் ஐவதுகுடி ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தினை ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் வீடுகள் மறுசீரமைப்பு பணி மற்றும் சாலை உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது ஊராக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## மேல்மலையனூர் ஒன்றியம் மேல் செவலாம்பாடியில்

# ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா



**செஞ்சி,ஏப்,12**

தொடர்ந்து கோடை வெயிலை முன்னிட்டு நீர் மோர் பந்தலையும் திமுக கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் நிகழ்ச்சியினையும் தொடங்கி வைத்தனர்

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மேல் செவலாம்பாடிஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில்புதிய நியாய விலை கட்டிடம் கட்டுவதற்கு பூமி பூஜை விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

மாவட்ட கவுன்சிலர் சாந்தி சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.நிகழ்ச்சியில்மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் மஸ்தான், ஆகியோர் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தனர். தொடர்ந்து மேல் செவலாம்பாடி கூட்டு சாலையில் கோடை வெயிலை முன்னிட்டு நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சியும், மேல்செவலாம்பாடி ஊராட்சியில்திமுகவில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் நிகழ்ச்சியை நடைபெற்றது

நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, நீர்மோர் வழங்கினார்.தொடர்ந்து அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருவப்படத்திற்கும், மறைந்த மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி திமுக கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் முகாமை தொடங்கி வைத்து கழக நிர்வாகிகளுக்கு புதிய உறுப்பினர் சேர்க்கைபடிவங்களை வழங்கினர்.நிகழ்ச்சியில் மத்தியஒன்றிய செயலாளர் நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்செல்வி ராம சரவணன்,ஒன்றிய கவுன்சிலர் செல்வி ரகுபதி,ஒன்றிய அவைத் தலைவர் உதயகுமார் ,துணைச் செயலாளர் தாஹிரா அப்துல் வகாப்,முன்னாள் ஒன்றிய பொருளாளர் தோப்பு சம்பத், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சம்பத்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், மாணவரணி அமைப்பாளர்கள் குமார், ஆறுமுகம், தகவல் தொழில் நுட்ப அணிஅமைப்பாளர்கள், மணிவண்ணன், சதீஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் அவலூர்பேட்டை செல்வம், பெருவளூர் கந்தவேல், சமூக ஆர்வலர் பாபு,ஊராட்சி நிர்வாகிகள் சத்யராஜ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கதிர்வேல், ராஜேந்திரன், பாண்டு, சின்ன பையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சக்தி வாசன் சுப்பிரமணியன் செய்திருந்தார்.



**புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மூலமாக திருமலைராயன் பட்டினத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு கிரிராஜா இணைத்தைச் சேர்ந்த 1100 கோழிக்குஞ்சுகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் பொது மக்களுக்கு 50 சதவீத மானிய விலையில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இணை இயக்குனர் கால்நடை பராமரிப்புத்துறை கோபிநாத், மருத்துவர் சுரேஷ் மற்றும் தொகுதிபிரமுகர்கள், பயனாளிகள் ஆகியோர் உள்ளனர்**

## 2021-2022-காரீப் மற்றும் ராபி பருவங்களுக்கான

# நிலுவையில் உள்ள பயிர் காப்பீடு இழப்பீட்டு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது

## விழுப்புரம் கலெக்டர் சி.பழனி தகவல்

**விழுப்புரம்,ஏப். 12,**

விழுப்புரம் மாவட்டத்தில் 2021 – 2022 ஆம் ஆண்டின் காரீப் பருவத்தில் பயிர் காப்பீடு செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள 216 விவசாயிகளுக்கு ரூ. 8,60,323/- ( ரூபாய் எட்டு லட்சத்து அறுபதாயிரத்து முந்நூற்று இருபத்திமூன்று மட்டும் ) மற்றும் 2021—2022 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் பயிர் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள 2,506 விவசாயிகளுக்கு ரூ.1,01,92,528 (ஒரு கோடியே ஒரு லட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து ஐநூற்றி இருபத்தி எட்டு ரூபாய் மட்டும் ) விடுவிக்கப்பட்டுள்ளது.

2021 –2022 –ஆம் ஆண்டு பயிர் காப்பீடு செய்திருந்த விவசாயிகளுக்கு இழப்பீடு தொகையாக கடந்த டிசம்பர் மாதம் 2021 –ல் காரீப் பருவத்திற்கு 2,915 விவசாயிகளுக்கு ரூ.3,38,14,727 (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தெட்டு லட்சத்து பதிநான்காயிரத்து எழுநூற்று இருபத்தி ஏழு மட்டும்), அக்டோபர் 2022 மாதத்தில் நெல் சம்பாவிற்கு 68,081 விவசாயிகளுக்கு ரூ.60,62,10,771/. (ரூபாய் அறுபது கோடியே அறுபத்து இரண்டு லட்சத்து பத்தாயிரத்தி எழுநூற்று எழுபத்தி ஒன்று மட்டும் ) டிசம்பர் 2022 மாதத்தில் ராபி இதர பயிர்களுக்கு 5,148 விவசாயிகளுக்கு ரூ.4,98,60,839/. (ரூபாய் நான்கு கோடியே தொன்னூற்று எட்டு லட்சத்து அறுபதாயிரத்து எண்ணூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) விடுவிக்கப்பட்டுள்ளது என கலெக்டர் டாக்டர் சி.பழனி , தெரிவித்துள்ளார்.

## கடலூர் முதுநகரில்

# திமுக சார்பில் நீர் மோர் பந்தல்

## மேயர் சுந்தரிராஜா திறந்து வைத்தார்



**கடலூர் ஏப்.12**

கடலூர் முதுநகரில் திமுக சார்பில் நீர் மோர் பந்தல் கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா திறந்து வைத்தார்.

கடலூர் முதுநகரில் திமுக சார்பில் கோடை வெயிலை முன்னிட்டு நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு திமுக கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு பழ வகைகள் குளிர்பானங்கள் தர்பூசணி இளநீர் ஆகியவற்றை வழங்கி தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் திமுக நிர்வாகி செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகராட்சி மன்ற உறுப்பினர் விஜயலட்சுமி செந்தில் வரவேற்றார். மாணவரணி துணை அமைப்பாளர் பாலாஜி , தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் , வழக்கறிஞர் கே.எஸ்.சக்திவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வல்லம் ஒன்றிய அதிமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு

**செஞ்சி, ஏப்.12-**

ஒருங்கிணைந்த வல்லம் ஒன்றிய அதிமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நாட்டாமங்கலம் கூட்டு ரோட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர்கள் விநாயகமூர்த்தி, நடராசன் ஆகியோர் தலைமை தாங்கி நீர்மோர் பந்தலை துவக்கி வைத்தார்கள்' அப்போது பொதுமக்களுக்கு தர்பூசணி, இளநீர், மோர் ஆகியவர்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர் மனோகரன் மாவட்ட இணை செயலாளர் ஆனந்தி அண்ணாதுரை பேரவை ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம் மாணவர் அணி ஒன்றிய செயலாளர் பாலமுருகன் மகளிர் அணி உஷாராணி, புனிதவள்ளி, ஐஸ்வர்யா கூட்டுறவு சங்க தலைவர்கள் ரவிச்சந்திரன், குமார் அவை தலைவர் கிருஷ்ணமூர்த்தி இளைஞர் பாசறை தமிழ் தகவல் தொழில்நுட்ப அணி ஸ்ரீதர் இலக்கிய அணி லட்சாதிபதி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கல்ராயன், விநாயகம் கிளைச் செயலாளர்கள் சுதாகர், சேகர், மதியழகன் நிர்வாகிகள் அசோக், சேட்டு, ராஜா, குறிஞ்சிப்பை ஆனந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**IN THE COURT OF THE HON'BLE PRINCIPAL DISTRICT MUNSIF AT PUDUCHERRY**
**O. S. NO. 518 OF 2023**

DAISY SCARLETT (Minor) Rep. By her Next Friend,
Natural guardian and father M. REGIS ANDREW
...... Plaintiff
Vs
1. Selvam
2. Registrar of Births and Deaths Puducherry Municipality Puducherry
...... Defendant

பொது அறிவிப்பு

இதனால் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி வழக்கில் வாதி தன் பெயரை DAISY என்பதற்கு பதிலாக DAISY SCARLETT என்று அறிவிக்க கோரியும் மேலும் தன் பிறந்த பதிவில் DAISY என்பதற்கு பதிலாக DAISY SCARLETT என்று திருத்தம் செய்திட வேண்டி இரண்டாவது பிரதிவாதிக்கு எதிராக செயல் உறுத்தும் உறுத்துக்கட்டளை வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் எதிர்வரும் 28.4.2023 அன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை ஒன்பது முப்பது மணிக்கு நேரில் ஆஜராகி தங்களின் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ளவும் தவறும் பட்சத்தில் வாதி கோரியபடி தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்

Tmt V Chithra Advocate
Puducherry

**மேன்மைமிகு முதலாவது கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் (IADM) புதுச்சேரி**
**O. S. NO. 513/2023**

தங்கதுரை ( இளவர் )
இளவரின் சார்பாக அவரது அப்பா தவகுமார்
....... வாதி
எதிர்
1. சேகர்
2. பதிவாளர் அவர்கள், பிறப்பு மற்றும் இறப்பு, உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி
........ பிரதிவாதிகள்

பொது அறிவிப்பு

மேற்கண்ட வாதி தனது பிறந்த பதிவில் (பதிவு எண்.No. OM/J/2007/008915 பதிவு தேதி 17.09.2007) தனது அம்மா பெயர் செல்வி (SELVI) என்று தவறாக உள்ளதை பன்னீர்செல்வி (PANEERSELVI) என்றும், அப்பா பெயர் தவகுமார் (THAVAKUMAR) என்று தவறாக உள்ளதை தவகுமார் (DHAVAKUMAR) என்று திருத்தம் செய்யக்கோரியும் மேலும் வாதி தனது அம்மா பெயரை பன்னீர் செல்வி (PANEERSELVI) என்றும், அப்பா பெயரை தவகுமார் (DHAVAKUMAR) என்றும் விளம்புகை செய்யக் கோரியும் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் 28.04.2023 அன்று காலை 10 மணிக்கு விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்கண்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை என தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்.

D. பாலாஜி,
வழக்கறிஞர், புதுச்சேரி.

**மேன்மைமிகு முதன்மை மாவட்ட முன்சீப் நீதிமன்றம் (PDM), புதுச்சேரி**
**O. S. NO. 496/2023**

ஷேக் ஆதம் ( இளவர் )
இளவரின் சார்பாக அவரது அம்மா முபின் பேகம்
.......வாதி
எதிர்
1. ஆஷிக் பாஷா
2. பதிவாளர் அவர்கள், பிறப்பு மற்றும் இறப்பு, உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி.
....... பிரதிவாதிகள்

பொது அறிவிப்பு

மேற்கண்ட வாதி தனது பிறந்த பதிவில் (பதிவு எண். No. OM/K/2005/745 பதிவு தேதி 26.10.2005) தனது அம்மா பெயர் முபின் (MUBIN) என்று தவறாக உள்ளதை முபினா பேகம் (MUBINA BEGAM) என்றும், அப்பா பெயர் மன்சூர் (MANZOOR) என்று தவறாக உள்ளதை ஷேக் மன்சூர் (SHEIK MANZUR) என்று திருத்தம் செய்யக்கோரியும் மேலும் வாதி தனது அம்மா பெயரை முபினா பேகம் (MUBINA BEGAM) என்றும், அப்பா பெயரை ஷேக் மன்சூர் (SHEIK MANSUR) என்றும் விளம்புகை செய்யக் கோரியும் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் 28.04.2023 அன்று காலை 10 மணிக்கு விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை என தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

D. பாலாஜி,
வழக்கறிஞர்,
புதுச்சேரி.

thinaboomi.com தினபூமி, ஏப்ரல் 12, 2023



**திருத்தணி ஒன்றிய அதிமுக செயலாளர் இ.என்.கண்டிகை ரவி ஏற்பாட்டில் கே.ஜி.கண்டிகை பகுதியில் நீர் மோர் பந்தலை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் பி.வி.ரமணா திறந்து வைத்தார். இதில் ஒன்றிய அவைத்தலைவர் குப்பன்,பொருளாளர் கோ.தாமோதரன், நிலவள வங்கி தலைவர் டி.எம்.சீனிவாசன், மாவட்ட பிரதிநிதி முருக்கம்பட்டு கருணாநிதி, ஒன்றிய நிர்வாகிகள் வேலஞ்சேரி பாலாஜி, பத்மாபுரம் சுரேஷ், கே.ஜி.கண்டிகை ஊராட்சி மன்ற தலைவர் ராஜசேகர், ஆதித்யா, ரமணா கலந்து கொண்டனர்.**

# கள்ளக்காதல் விவகாரத்தில் கத்தியால் குத்தப்பட்ட பிளஸ்-2 மாணவன் உயிரிழப்பு

**சென்னை ஏப் 12-**

சென்னை விருகம்பாக்கம், ஏரிக்கரை தெருவை சேர்ந்தவர் இளஞ்செழியன் என்கிற ராஜா. கூலித்தொழிலாளி. இவரது மனைவி மகாலட்சுமி. இவர்களது மகன் மதன்குமார். அரசு பள்ளியில் பிளஸ்-2 வகுப்பு படித்து வந்தார்.

ராஜா மதுபோதைக்கு அடிமையானவர். இதனால் அவர் வேலைக்கு ஏதும் செல்லாமல் ஊர் சுற்றி வந்தார். மகாலட்சுமி பெட்ரோல் பங்க் ஒன்றிற்கு வேலைக்கு சென்றார். அப்போது அவருக்கும் வேளச்சேரியை சேர்ந்த கார்த்திக் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது.பின்னர் இது கள்ளக்காதலாக மாறியது. இருவரும் கடந்த சில ஆண்டுகளாக ரகசியமாக குடும்பம் நடத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் மனம் திருந்திய மகாலட்சுமி மீண்டும் கணவர் ராஜாவுடன் சேர்ந்து வாழ திரும்பி வந்தார். காதலி மகாலட்சுமி பிரிந்து சென்றதால் கோபம் அடைந்த கார்த்திக், கடந்த 7-ந்தேதி, விருகம்பாக்கத்தில் உள்ள மகாலட்சுமியின் வீட்டிற்கு சென்று குடும்பம் நடத்த வருமாறு அழைத்து ரகளையில் ஈடுபட்டார்.இதனை மகாலட்சுமியின் மகன் மதன்குமார் கண்டித்தார்.இதனால் கார்த்திக்-மதன்குமார் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. அப்போது கார்த்திக் மறைத்து வைத்திருந்த கத்தியால் மதன்குமாரை சரமாரியாக குத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார். இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்த மதன் குமாரை மீட்டு சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கு தொடர்பாக போலீசார் கார்த்திக்கை கைது செய்தனர்.இந்த நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த மதன்குமார் நேற்று முன்தினம் இரவு பரிதாபமாக உயிரிழந்தார்.இதையடுத்து இந்த வழக்கை போலீசார் கொலை வழக்காக மாற்றி பதிவு செய்து உள்ளனர். இது தொடர்பாக மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# போதையில் வாகனம் ஓட்டி ரூ.10 ஆயிரம் அபராதம் கட்டாதவர்களின் வாகனங்கள் பறிமுதல்

**சென்னை ஏப் 12-**

சென்னை மாநகரில் மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை பிடித்து போக்குவரத்து போலீசார் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து வருகிறார்கள். இப்படி போதையில் சிக்குபவர்களில் பலர் அபராதத்தை கட்டாமல் ரசீதை மட்டும் வாங்கி வைத்துக் கொண்டு ஏமாற்றி விடுகிறார்கள்.

இதுபோன்று அபராதம் செலுத்தாமல் இருப்பவர்களை கண்டுபிடித்து அபராதம் கட்ட வைப்பதற்காக போலீசார் எடுக்கும் அதிரடி நடவடிக்கைகள் குடிமகன்களை பீதியில் ஆழ்த்தி உள்ளது.பெரும்பாலான சாலை விபத்துக்களுக்கு மதுபோதையில் வாகனம் ஓட்டுவதே முக்கிய காரணமாக உள்ளது. இதன் காரணமாகவே போதையில் வாகனம் ஓட்டுபவர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் வசூலிக்க திட்டமிட்டு அதை நடைமுறைக்கும் கொண்டு வரப்பட்டு உள்ளது. ரூ.10 ஆயிரம் அபராதத்துக்கு பயந்து பலர் மது குடித்த பின்னர் வாகனங்களை ஓட்டுவதில்லை.

அதே நேரத்தில் போதையில் வாகனம் ஓட்டுபவர்களை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. இதுபோன்று போதையில் வாகனம் ஓட்டி அபராதம் கட்டாமல் 8119 பேர் போலீசாரை ஏமாற்றி வருகிறார்கள்.

இதுபோன்ற நபர்களிடம் இருந்து ரூ.10 ஆயிரம் அபராத தொகையை வசூலிக்க போலீசார் கோர்ட்டு வரை சென்று வாகனங்களை பறிமுதல் செய்ய உத்தரவுகளையும் வாங்கி வைத்துள்ளனர். சென்னையில் 361 பேருக்கு எதிராக இதுபோன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு அவர்களது அசையும் சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதுபோன்று அபராதம் கட்டாமல் தொடர்ச்சியாக ஏமாற்றி வரும் அனைவரது வாகனங்களையும் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுபோதையில் சிக்கி அபராதம் கட்டாதவர்களிடம் இருந்து ரூ.10 ஆயிரம் அபராதத்தை வசூலிக்க சென்னையில் 10 இடங்களில் அழைப்பு மையங்களை ஏற்படுத்தி போலீசார் அபராத வசூலிலும் ஈடுபட்டு வருகிறார்கள். 2 மாதங்களில் இந்த அழைப்பு மையங்கள் மூலமாக 8674 போதை வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நபர்களிடம் இருந்து ரூ.8 கோடியே 97 லட்சத்து 27ஆயிரம் 400 அபராத தொகை வசூலிக்கப்பட்டு உள்ளது.எனவே மதுபோதையில் சிக்கி அபராதம் கட்டாமல் இருப்பவர்கள் உடனடியாக தங்களது அபராத தொகையை செலுத்த வேண்டும் என்று போலீசார் கேட்டுக் கொண்டுள்ளனர். ஆன்லைனில் பணம் செலுத்தும் அனைத்து வழிகளிலும் பணத்தை செலுத்தலாம் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

# சென்னை வடபழனி அருகே 3 வீடுகளில் செல்போன் கொள்ளை

**சென்னை ஏப் 12-**

நோட்டமிட்ட மர்மநபர்கள் வீட்டுக்குள் புகுந்து விலை உயர்ந்த செல்போனை திருடி சென்று விட்டனர்.

**கொள்ளை**

வடபழனி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.கோடம்பாக்கம், சொர்ணாம்பிகை தெருவில் உள்ள வீட்டின் 3-வது தளத்தில் நண்பர்களுடன் வசித்து வருபவர் விக்னேஷ்.சினிமாத்துறையில் வேலை பார்த்து வருகிறார். நேற்று முன் தினம் இரவு அவர் காற்றுக்காக வீட்டு கதவை திறந்து வைத்துவிட்டு தூங்கினார். இதனை நோட்டமிட்ட மர்மநபர்கள் வீட்டுக்குள் புகுந்து விலை உயர்ந்த செல்போனை திருடி சென்று விட்டனர்.

இதேபோல் அருகில் உள்ள வீட்டின் மொட்டை மாடிகளில் வசித்து வரும் கூலி தொழிலாளிகள் சுரேஷ் மற்றும் வடமாநில தொழிலாளி சகிந்தர் ஆகியோரின் வீடுகளிலும் செல்போன்கள், ரூ.1000 ரொக்கம், சார்ஜர்கள் ஆகியவற்றை சுருட்டி சென்று விட்டனர். மொத்தம் 6 செல்போன்கள் கொள்ளைபோய் இருந்தது. இதுகுறித்து வடபழனி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்



**சென்னை வளசரவாக்கம் 149 வது வார்டு வடக்கு பகுதி அதிமுக சார்பில் பெரியார் திடல் அருகே பகுதி செயலாளர் கே.தாமோதரன் தலைமையில் நீர் மோர் பந்தலை முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான பா.பென்ஜமின் திறந்து வைத்து பொது மக்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் கா.சு.ஜனார்த்தனம், வட்ட செயலாளர்கள் ராஜகோபால், வேணுகோபால், ராஜ்குமார் பச்சைபய்யன், சந்திரசேகர் மற்றும் பலர் உள்ளனர்.**

# வடசென்னை தொகுதியில் புதிய கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடம் கட்டுவதற்காக ரயில்வே நிலம், சுரங்க பாதை அமைத்து தர வேண்டும்

## ரயில்வே துறை அமைச்சர் வைஷ்ணவிக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி கடிதம்

**திருவொற்றியூர் ஏப்12**

வடசென்னை தொகுதியில் புதிய கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடம் கட்டுவதற்காக ரயில்வே நிலத்தையும் சுரங்க பாதை அமைத்து தர வேண்டும்

ரயில்வே துறை அமைச்சர் வைஷ்ணவிக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி கடிதம் எழுதி உள்ளார். அந்த கடிதத்தில் கூறியிருப்பதாவது,

எனது வட சென்னை தொகுதியில் சாத்தாங்காடு கிராமத்தில் ரயில்வே துறைக்கு சொந்தமான 8 ஏக்கர் நிலத்தை கேந்திரிய வித்யாலயா பள்ளி கட்டுவதற்காக ரயில்வே துறை அதிகாரிகள், தமிழ்நாடு வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் கேந்திரிய வித்யாலயா சங்காதனை சேர்ந்த அதிகாரிகள் இணைந்து ஆய்வு செய்தனர் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கேந்திரிய வித்யாலயா சங்காதனின் புதிய விதிகளின்படி, ஒரு புதிய கேந்திரிய வித்யாலயா பள்ளி துவங்கப்பட வேண்டுமெனில் அதற்கான முன்மொழிவை செய்திடும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் துறையானது, அப்பள்ளி கட்டுவதற்கு தேவையான நிலத்தை இலவசமாகவோ அல்லது பெயரளவுக்கு குத்தகை ஆகவோ தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தங்களுக்கு ஒரு நிகழ்வை குறிப்பிட்டு கூற விரும்புகின்றேன். 16.02.2010 அன்று மனித வளத் துறை அமைச்சரும், ரயில்வே அமைச்சரும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இதன்படி ரயில்வே அமைப்பு ரகம், 50 கேந்திர வித்யாலயா பள்ளிகளை துவங்குவதற்கு தேவையான வசதிகளை செய்து தர ஒப்புதல் தந்துள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி, ஒடிசா மாநிலத்தில் அங்குல் மற்றும் டிட்லாகரில் 2 புதிய கேந்திர வித்யாலயா பள்ளிகளை துவங்குவதற்கு கிழக்கு கடற்கரை ரயில்வே துறையின் பரிந்துரையுடன் புவனேஸ்வரில் அமைந்துள்ள கேந்திர வித்யாலயா சங்காதன் பிரிவு, ரயில்வே நிர்வாகத்தை கேட்டுக் கொண்டுள்ளது.

இதன்படி இதற்கான பணியை துவங்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு அங்குல் பகுதியில் கேந்திரிய வித்யாலயா சங்காதனுக்கு ஒரு கட்டிடத்தை தற்காலிகமாக ரயில்வே நிர்வாகம் வழங்கி உள்ளது. இதில் தற்போது ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பிரிவு என தற்காலிகமாக பள்ளி துவங்கப்பட்டு அதில் சுமார் 410 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அங்குல் ரயில்வே நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த



தற்காலிக பள்ளி இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் மிக அழகாக அமைந்துள்ளது. இதேபோல் டிடால்கர் பகுதியில் ஒரு கேந்திர வித்யாலயா பள்ளி அமைவதற்கு ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பல ஆண்டுகளாக, அனைவருக்கும் கல்வியை உறுதி செய்யும் முயற்சியில் கல்வி நிறுவனங்களை சமூகத்திற்கு அணுகக்கூடியதாக மாற்றுவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. நம் நாட்டில் அரசுப் பள்ளிகளே அதிக அளவில் கல்வியை வழங்குவதால், அரசுப் பள்ளிகளின் தேவை அதிகரித்து வருகிறது. சரியான மற்றும் தரமான கல்வி மட்டுமே வலுவான பண்புடன் கூடிய நல்ல குடிமகனாக உருவாகும் என்று நம்புவதால், இந்த அரசாங்கம் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக, மத்திய மற்றும் மாநிலத் துறையின் மாற்றுத்திறனாளி ஊழியர்களின் குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு கே.வி பள்ளிகள் தரமான கல்வியை வழங்குவதால், நாட்டில் 500 புதிய கே.வி.க்களை திறக்க இந்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

எனது நாடாளுமன்றத் தொகுதியான வடசென்னை 30 லட்சம் மக்கள்தொகை கொண்ட சென்னை பெருநகரத்தின் ஒரு பகுதியாகும். இது தமிழ்நாட்டின் மிகப்பெரிய லோக்சபா தொகுதிகளில் ஒன்றாக இருந்தாலும், பொதுத் துறை நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், மத்திய அரசு, பிற அரசு அலுவலகங்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் வசிக்கின்றனர். இந்த தொகுதியில் கேந்திரிய வித்யாலயா பள்ளி இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதி மக்கள் நீண்ட காலமாக தரமான மற்றும் மலிவு விலையில் கல்வி வசதி இல்லாமல் கேந்திரிய வித்யாலயா திறப்புக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர். வடசென்னையில் கேந்திரிய வித்யாலயா அமைப்பதற்காக மேற்குறிப்பிட்ட அடையாளம் காணப்பட்ட நிலத்தை இலவசமாகவோ அல்லது பெயரளவு குத்தகையாகவோ வழங்கினால், எனது தொகுதி மக்கள் எப்போதும் உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.

இதுபோன்று ரயில்வே நிர்வாகம் வடசென்னை தொகுதியில் புதிதாக திறக்கப்பட உள்ள கேந்திர வித்யாலயா பள்ளிக்கு தேவையான நிலத்தை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு வட சென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மத்திய ரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதி உள்ளார்.

# நந்தம்பாக்கம் மற்றும் துரைப்பாக்கம் பகுதிகளில் கஞ்சா விற்பனை: 3 பேர் கைது

**சென்னை ஏப் 12-**

நந்தம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நந்தம்பாக்கம், ஆர்மி மைதானம் டபுள் வாட்டர் டேங்க பகுதியில் கண்காணித்து, அங்கு நின்று கொண்டிருந்த நபர்களை பிடித்து விசாரணை செய்த போது அவர்கள் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினர். சந்தேகத்தின் பேரில் அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்த போது அதில் விற்பனைக்காக கஞ்சா மறைத்து வைத்திருந்ததும், 2 நபர்களும் திரிபுரா மாநிலத்திலிருந்து கஞ்சா எடுத்து வந்ததும் தெரியவந்தது.அதன் பேரில் மேற்படி இடத்தில் சட்டவிரோதமாக விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த 1.கபிர் உசேன், 2.இசாத் அகமது, ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதே போல, துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் துரைப்பாக்கம், பாண்டியன் நகர் பார்க் பின்புறம் அருகே சட்டவிரோதமாக விற்பனைக்காக கஞ்சா பதுக்கி வைத்திருந்த அஜய் (எ) ரீட்டா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1.2 கிலோ கஞ்சா மற்றும் 1 இரு சக்கர வாகனம் பறிமுதல் செய்தனர்.



**வளசரவாக்கம் மண்டலம் 147 வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து தெருக்களிலும் என் குப்பை எனது பொறுப்பு என்ற தூய்மையான வார்டுக்காக மாற்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் தொடங்கி வைத்தார்.**

# சென்னையில் 15 வயதுக்கு கீழ் உள்ள குழந்தை தொழிலாளர்கள் மீட்பு

**சென்னை ஏப் 12-**

15 வயதுக்கு கீழ் உள்ள குழந்தை தொழிலாளர்களை சென்னை மாவட்ட குழந்தை தொழிலாளர் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

**மீட்பு**

சென்னை பூக்கடை பகுதி பொருத்தவரை அதிகப்படியான தொழில்கள் செய்யும் இடமாக இருந்து வருகிறது இதில் பல்வேறு விதமான தொழிற்சாலைகள் தொழில் குடோன்கள் உள்ளிட்டவை இயங்கி வருகிறது இது போன்ற குடோன்களில் அதிகப்படியான குழந்தை தொழிலாளர்கள் பணியாற்றி வருவதாக குழந்தை தொழிலாளர் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது இந்த தகவலின் அடிப்படையில் குழந்தை தொழிலாளர் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மண்ணடி பகுதி முழுவதும் திடீரென சோதனை மேற்கொண்டு உள்ளார்கள்.

இந்த சோதனையில் ஆர்டிஓ அதிகாரிகள் தாசில்தார், குழந்தை தொழிலாளர் தடுப்பு பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டோர் அனைவரும் மாவட்ட ஆட்சியரின் உத்தரவுப்படி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் திடீர் சோதனை மேற்கொள்வது வழக்கம்.

அதன்படி இவர்களுக்கு கிடைத்த தகவலின் படி மண்ணடி முழுவதும் சோதனை மேற்கொண்டதில் 15 வயதிற்கும் கீழுள்ள குழந்தைகள் மாத வருமானம் இல்லாமல் மூன்று வேளை உணவு மட்டும் கொடுத்துவிட்டு பணியாற்றி வருவது தெரிய வந்தது இந்த குழந்தைகளை மீட்ட பிறகு, செய்தியாளர்களை சந்தித்த சென்னை மாவட்ட குழந்தை தொழிலாளர் தடுப்பு பிரிவு உதவி ஆணையர் ஜெயலட்சுமி கூறுகையில்..எப்பொழுதுமே செவ்வாய்க்கிழமை தோறும் இதுபோன்ற சோதனைகளை மேற்கொள்வது வழக்கம். அதன்படி நேற்று மண்ணடி முழுவதும் சோதனை மேற்கொண்டு முதலில் மீரா லெப்பை தெருவில் ஒரு குழந்தை தொழிலாளர்களை மீட்டோம், அதனை அடுத்து மூக்கர் நல்லமுத்து தெரு பகுதியில் பேக் தைக்கும் குடோன்களில் ஆறு குழந்தைகளை ரூமில் வைத்து அடைத்து வைத்திருந்தார்கள் அவர்களையும் மீட்டுள்ளோம். போஸ்ட் ஆபீஸ் தெரு பகுதியில் இருந்து நான்கு குழந்தைகளை மீட்டுள்ளோம்.

மேலும் குழந்தைகளிடம் விசாரணை நடத்தியபோது காலை 11 மணியிலிருந்து 5 மணி வரை பணியாற்றுவதும் அதேபோன்று இரவு 8 மணியில் இருந்து அதிகாலை 3 மணி வரை பணியாற்றி வருவதும் விசாரணையில் தெரிய வந்தது.குறிப்பாக இந்த குழந்தைகள் ஒரே இடத்தில் அடைத்து வைக்கப்பட்டது மட்டுமில்லாமல் மூன்று வேளை உணவு மட்டும் அளித்துவிட்டு அவர்களுக்கு மாத வருமானம் எதுவும் கொடுக்காமல் இருந்தது தெரிய வந்தது.இதன்பிறகு ஆட்சியர் உத்தரவுன்படி ஆர்டிஓ அதிகாரிகளை வரவைத்து 11 குழந்தைகளை மீட்டு உள்ளோம் மீட்கப்பட்ட 11 நபர்களில் 10 பேர் பீகார் மாநிலத்தை சேர்ந்தவர்கள். ஒரு நபர் மட்டும் நேபால் மாநிலத்தை சேர்ந்தவர் என தெரிய வந்தது. மீட்க்கப்பட்ட குழந்தைகளை குழந்தைகள் நல ஆகியோரிடம் தடுப்பு பிரிவு உதவி ஆணையர் ஜெயலட்சுமி ஒப்படைத்தார்.

# சென்னை அசோக் நகரில் ஓட்டலில் கொள்ளை

**சென்னை ஏப் 12-**

அசோக் நகர், 100 அடி சாலையில் பிரபல ஓட்டல் செயல்பட்டு வருகிறது. நேற்று முன் தினம் இரவு வழக்கம் போல் வேலை முடிந்ததும் ஊழியர்கள் ஓட்டலை பூட்டி சென்றனர். இன்று அதிகாலை ஊழியர்கள் கடையை திறக்க வந்தபோது பக்கவாட்டில் உள்ள ஷட்டர் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உள்ளே சென்று பார்த்தபோது கல்லாப்பெட்டியில் இருந்த ரூ.3 ஆயிரத்து 500-யை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.

ஓட்டலில் அதிக அளவு பணம் இல்லாததால் கொள்ளையர்கள் ஏமாற்றம் அடைந்து உள்ளனர். இதுகுறித்து கே.கே. நகர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எழும்பூரில் விவசாயிகள் போராட்டம்: 100 பேர் கைது

**சென்னை ஏப் 12-**

நாகப்பட்டினம் சி.பி.சி.எல் பெட்ரோ கெமிக்கல் ஆலை திட்டத்தை ரத்து செய்ய கோரி விவசாயிகள் சங்கம் சார்பில் எழும்பூரில் போராட்டம் நடந்தது. போராட்டத்தில் பெண்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் ஈசன் முருகசாமி தலைமை வகித்தார். தமிழக அரசை கண்டித்து இந்த போராட்டம் நடந்தது. தமிழக அரசே தமிழக அரசே முப்போகம் விளையும் எங்கள் விவசாய நிலங்களை பறிக்காதே, பறிக்காதே என விவசாயிகள் கோஷம் எழுப்பினார்கள்.

இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்தி போலீசார் கைது சய்தனர். இதில் 100 விவசாயிகள் கைது செய்யப்பட்டு தனியார் மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டனர்.

# கடந்த மாதத்தில் மட்டும் சென்னை விமான நிலையத்தில் 17.5 லட்சம் பேர் பயணம்

**சென்னை ஏப் 12-**

சென்னை விமான நிலையத்தில் பயணிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனை கணக்கிட்டு தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு விமான சேவைகளும் அதிகரிக்கப்பட்டு உள்ளது.சென்னை விமான நிலையத்தில் அதிகரித்து வரும் பயணிகளின் வசதிக்காக தற்போது ஒருங்கிணைந்த புதிய முனையம் கட்டப்பட்டு வருகிறது. இதன் முதல் கட்ட பணி முடிந்ததையடுத்து புதிய ஒருங்கிணைந்த முனையம் கட்டிடத்தை கடந்த 8-ந் தேதி பிரதமர் மோடி திறந்து வைத்தார்.இதில் 108 கவுண்டர்கள் அமைக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. கோடை விடுமுறை தொடங்கியதையடுத்து தற்போது சென்னையில் இருந்து வெளிநாடு மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களுக்கு செல்லும் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கி உள்ளது.கடந்த மாதம் மட்டும் (மார்ச்) சென்னை விமான நிலையத்தில் இருந்து 17 லட்சத்து 31 ஆயிரத்து 770 பேர் பயணம் செய்து உள்ளனர். இதில் உள்நாட்டு பயணமாக 12 லட்சத்து 89 ஆயிரத்து 995 பேரும், வெளிநாட்டு பயணமாக 4 லட்சத்து 41 ஆயிரத்து 775 பேரும் சென்று உள்ளனர். மேலும் கடந்த மாதத்தில் 9 ஆயிரத்து 413 உள்நாட்டு விமானங்களும், 2 ஆயிரத்து 609 வெளிநாட்டு விமான சேவைகளும் இயக்கப்பட்டு இருப்பதாக சென்னை விமான நிலையம் அறிவித்து உள்ளது.

# காசிமேட்டில் வெளிநாட்டு ஆந்தை சிக்கியது

**சென்னை ஏப் 12-**

காசிமேட்டில் சிக்கிய வெளிநாட்டு ஆந்தையை தீயணைப்பு வீரர்கள் பிடித்து வனத்துறையிடம் ஒப்படைத்தனர். சென்னை காசிமேடு இந்திரா நகரில் உள்ள அங்கன்வாடியில் சிறு குழந்தைகள் படித்து வருகின்றனர். நேற்று அந்த கட்டிடத்தில் ஒரு அறை அருகில் உள்ள படிக்கட்டு பகுதியில் வித்தியாசமாக பறவை ஒன்று இருந்தது. இதை பார்த்து அங்கன்வாடியில் வேலை பார்க்கும் ஊழியர்கள், தீயணைப்பு கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தனர். உடனடியாக திருவொற்றியூர் தீயணைப்பு அலுவலர் முருகானந்தம் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு சென்று அங்கன்வாடி கட்டிடத்தில் தொங்கிகொண்டிருந்த பறவையை லாவகமாக பிடித்தனர். பின்னர் சோதனை செய்ததில் அது ஆஸ்திரேலிய நாட்டு ஆந்தை என்பது தெரிந்தது. தீயணைப்பு வீரர்கள் பிடிபட்ட அந்த ஆஸ்திரேலிய ஆந்தையை வனத்துறையிடம் ஒப்படைத்தனர்.

### ஹெல்மெட்டை மைதானத்தில் வீசிய

# லக்னோ வீரர் அவேஷ்கானுக்கு ஐ.பி.எல். நிர்வாகம் எச்சரிக்கை

**பெங்களூரு, ஏப்.12-**




லக்னோ அணி வீரர் அவேஷ் கான் நடத்தை விதிகளை மீறியதற்காக ஐபிஎல் நிர்வாகத்தால் எச்சரிக்கப்பட்டுள்ளார் .

ஐ.பி.எல். தொடரில் நடந்த ஆட்டத்தில் பெங்களூரு - லக்னோ அணிகள் மோதின. இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 20 ஓவர் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 212 ரன்கள் எடுத்தது. 213 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி ஸ்டாய்னிஸ் , நிகோலஸ் பூரானின் அதிரடியால் கடைசி பந்தில் வெற்றிபெற்றது. கடைசி ஓவரில் லக்னோவின் வெற்றிக்கு 5 ரன் தேவைப்பட்டது. கைவசம் 3 விக்கெட் இருந்தது. பரபரப்பான 20-வது ஓவரை வேகப்பந்து வீச்சாளர் ஹர்ஷல் பட்டேல் வீசினார். இதில் முதல் 5 பந்துகளில் 4 ரன் எடுத்த லக்னோ அணி மார்க்வுட் (1 ரன்), ஜெய்தேவ் உனட்கட் (9 ரன்) ஆகியோரின் விக்கெட்டுகளையும் தாரைவார்த்தது. இதனால் கடைசி பந்தில் ஒரு ரன் தேவையாக இருந்தது. கடைசி பந்தை சந்தித்த அவேஷ்கான் பந்தை அடிக்க தவறினாலும் வேகமாக ஓடி ஒரு ரன் எடுத்து விட்டார். விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக் கொஞ்சம் தடுமாறி விட்டார். இல்லாவிட்டால் ரன்-அவுட் செய்து சமனில் முடித்திருக்கலாம். ஆனால் அதற்குள் லக்னோ ஒரு ரன் எடுத்து விட்டது. தொடர்ந்து வெற்றி பெற்ற உற்சாகத்தில் ஹெல்மெட்டை தூக்கி அவேஷ் கான் கீழே வீசினார். இந்த நிலையில் லக்னோ அணி வீரர் அவேஷ் கான் நடத்தை விதிகளை மீறியதற்காக ஐபிஎல் நிர்வாகத்தால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

# கூடுதலாக நேரம் எடுத்துக் கொண்டதால் பெங்களூர் கேப்டனுக்கு அபராதம்

### ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை

**பெங்களூரு, ஏப் 12-**



கூடுதலாக நேரம் எடுத்துக் கொண்டதால் கேப்டன் டு பிளிஸ்சிக்கு ரூ.12 லட்சம் அபராதம் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

16-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த 15-வது லீக் ஆட்டத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி, லக்னோ சூப்பர் ஜெயன்ட்சை சந்தித்தது. இதில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பெங்களூரு அணி 2 விக்கெட்டுக்கு 212 ரன்கள் குவித்தது. இதையடுத்து 213 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய லக்னோ அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 213 ரன்கள் குவித்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றியை சுவைத்தது. லக்னோஅணியின் அதிக பட்ச சேசிங் இது தான். 4-வது லீக்கில் ஆடிய லக்னோவுக்கு இது 3-வது வெற்றியாகும். பெங்களூருவுக்கு இது 2-வது தோல்வியாகும். இந்த நிலையில், பெங்களூரு அணி கேப்டன் பாப் டு பிளிஸ்சிக்கு ரூ.12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் பந்து வீச வழங்கப்பட்ட நேரத்தை விட, கூடுதலாக நேரம் எடுத்துக் கொண்டதால் கேப்டன் டு பிளிஸ்சிக்கு ரூ.12 லட்சம் அபராதம் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### கடைசி பந்தில் லக்னோ திரில் வெற்றி

# பெங்களூரு ரசிகர்களை வாயை மூடும்படி சைகை செய்த காம்பீர்

**பெங்களூரு, ஏப் 12-**




பெங்களூரு அணியை கடைசி பந்தில் வீழ்த்தில் லக்னோ அபார வெற்றி பெற்றது. இதில் பெங்களூரு ரசிகர்களை வாயை மூடும்படி சைகை செய்த கவுதம் காம்பீர்.

ஐ.பி.எல். தொடரில் நடந்த ஆட்டத்தில் பெங்களூரு - லக்னோ அணிகள் மோதின. இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 20 ஓவர் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 212 ரன்கள் எடுத்தது. 213 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய லக்னோ நிகோலஸ் பூரானின் அதிரடியால் கடைசி பந்தில் வெற்றிபெற்றது. கடைசி ஓவரில் 5 ரன் தேவைப்பட்ட நிலையில் கடைசி பந்தில் லக்னோ வெற்றிபெற்றது. கடைசி பந்தில் 1 ரன் தேவைப்பட்ட நிலையில் பந்து கீப்பர் தினேஷ் கார்த்திக் பக்கம் செல்ல அவர் பந்தை ஸ்டம்ப் நோக்கி வீசினார். ஆனால் அதற்குள் லக்னோ வீரர்கள் ரன் ஓடியதால் லக்னோ அணி கடைசி பந்தில் திரில் வெற்றி பெற்றது. இந்த திரில் போட்டியில் லக்னோ வெற்றிபெற்றதையடுத்து லக்னோ வீரர்கள் மைதானத்திற்குள் விரைந்து வந்து ஆரவாரம் செய்தனர். அப்போது, லக்னோ அணியின் ஆலோசகர் கவுதம் கம்பீர் மைதானத்தில் குவிந்திருந்த பெங்களூரு ரசிகர்களை நோக்கி 'வாயை மூடும்படி சைகை செய்தார். இது தொடர்பான வீடியோ மற்றும் புகைப்படம் சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# தனது சொந்த சாதனைக்காக விளையாடினார் விராட் கோலியை விமர்சித்த சைமன் டவுல்

**புதுடெல்லி, ஏப் 12-**





சாதனைக்காக விளையாடாமல் அணிக்காக விளையாடுங்கள் என்று சைமன் டவுல் தற்போது விராட் கோலியையும் நேரடியாக விமர்சித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடர் 15-வது லீக் போட்டியில் பெங்களூர் அணியும் லக்னோ அணியும் மோதினர். இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 20 ஓவர்களில் 212 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக விராட் கோலி 61, கேப்டன் டு பிளேஸிஸ் 79, மேக்ஸ்வெல் 59 என ரன்களை குவித்தனர். அதைத்தொடர்ந்து 213 ரன்களை துரத்திய லக்னோ கடைசி பந்தில் 1 ரன் தேவைப்பட்ட போது மன்கட் செய்வதில் ஹர்ஷல் படேல் சொதப்பிய நிலையில் தினேஷ் கார்த்திக் ரன் அவுட் செய்வதில் சொதப்பியதால் லக்னோ போராடி த்ரில் வெற்றி பெற்றது. முன்னதாக இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூருக்கு 2019-க்குப்பின் சதமடிக்காமல் இருந்த கதைக்கு சமீபத்தில் முற்றுப்புள்ளி வைத்து முழுமையான ஃபார்முக்கு திரும்பிய விராட் கோலி ஆரம்பத்திலேயே அதிரடி துவக்கி விரைவாக ரன்களை சேர்த்தார். குறிப்பாக தனது கேரியரிலேயே உச்சகட்டமாக பவர் பிளே ஓவர் முடிவதற்குள் 42 ரன்கள் குவித்த அவர் சரவெடியாக பேட்டிங் செய்தார். ஆனால் அரை சதத்தை தொட வேண்டும் என்பதற்காக சற்று மெதுவாக விளையாடிய அவர் அடுத்த 7 பந்துகளில் 8 ரன்களை எடுத்து 50 ரன்களைத் தொட்டார். அதனால் அதிருப்தியடைந்த முன்னாள் நியூசிலாந்து வீரர் சைமன் டவுல் தன்னுடைய சொந்த சாதனைக்காக விராட் கோலி மெதுவாக விளையாடியதாக நேரலையில் விமர்சித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

### ஆர்.சி.பி.க்கு எதிரான போட்டியில்

# 15 பந்தில் அரைசதம் அடித்து நிக்கோலஸ் பூரன் சாதனை



**பெங்களூரு, ஏப் 12-**

ஆர்.சி.பி.க்கு எதிரான போட்டியில் 15 பந்தில் அரைசதம் அடித்து நிக்கோலஸ் பூரன் சாதனை படைத்தார்.

ஐ.பி.எல்.லில் ஆர்.சி.பி.க்கு எதிரான போட்டியில் 15 பந்தில் அரைசதம் அடித்த நிகோலஸ் பூரன் பல சாதனை பட்டியலில் இணைந்துள்ளார். ஐ.பி.எல். தொடரில் ஆர்.சி.பி. - லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டி பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்தது. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் ஆடிய ஆர்.சி.பி. 20 ஓவரில் 212 ரன்களை குவித்தது. 213 ரன்கள் என்ற இலக்கை விரட்டிய லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணியில் 23 ரன்களுக்கே 3 விக்கெட்டை இழந்துவிட்டது. மார்கஸ் ஸ்டோய்னிஸ் அதிரடியாக ஆடி 30 பந்தில் 61 ரன்களை குவித்தார். அதன்பின்னர் காட்டடி அடித்த நிகோலஸ் பூரன் 15 பந்தில் அரைசதம் அடித்து, 19 பந்தில் 7 சிக்ஸர்களுடன் 62 ரன்களை குவிக்க, கடைசி பந்தில் இலக்கை அடித்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் 15 பந்தில் அரைசதம் அடித்த நிக்கோலஸ் பூரன் சாதனை படைத்தார். இந்த ஐ.பி.எல். தொடரில் இதுவே அதிவேக அரைசதம் ஆகும். ஒட்டுமொத்த ஐ.பி.எல்.லில் அதிவேக அரைசதம் அடித்த வீரர்கள் பட்டியலில் 2-ம் இடத்தை யூசுஃப் பதான் மற்றும் சுனில் நரைனுடன் பூரன் பகிர்ந்துள்ளார். 14 பந்தில் அரைசதம் அடித்த ராகுல் மற்றும் பாட் கம்மின்ஸ் ஆகிய இருவரும் முதலிடத்தை பகிர்ந்துள்ளனர். ஐ.பி.எல்.லில் அதிகமான ஸ்டிரைக் ரேட் கொண்ட வீரர்கள் பட்டியலில் 326.32 என்ற ஸ்டிரைக் ரேட்டுடன் பூரன் 4-ம் இடத்தில் உள்ளார். இந்த பட்டியலில் பாட் கம்மின்ஸ் (373.33) முதலிடத்திலும், ரெய்னா(348), யூசுஃப் பதான் (327.27) ஆகிய மூவரும் முதல் 3 இடங்களில் உள்ளன.

# சென்னை போட்டிக்கு டிக்கெட் கிடைக்காமல் தவிக்கும் ரசிகர்கள்: கள்ளச்சந்தையில் விற்பனை



**சென்னை, ஏப்.12**

16-வது ஐபிஎல் சீசனுக்கான கிரிக்கெட் திருவிழா பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. கிரிக்கெட் ரசிகர்களை சீட்டின் நுனிக்கே சென்று அமர்ந்து பார்க்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

கொல்கத்தா மற்றும் லக்னோ ஆகிய போட்டிகளை உதாரணமாக சொல்லலாம். இரு போட்டிகளும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதே நிலை தான் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கும் ஏற்பட்டு வருகிறது. இதற்கு முன்னதாக லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சிஎஸ்கே 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், தான் நாளை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கும், ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கும் இடையிலான 17ஆவது போட்டி நடைபெறுகிறது.

இந்த சூழலில் நாளை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற உள்ள சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிக்கான டிக்கெட் ரசிகர்களுக்கு கிடைக்காமல் தவித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதே சூழல்தான் சென்னை - லக்னோ இடையிலான போட்டிக்கும் இருந்தது.ஆன்லைன் டிக்கெட்டும் விற்று தீர்ந்த நிலையில், 750 ரூபாய் கொண்ட டிக்கெட்டை சமூக வலைதளம் மூலமாக பலரும் ரூ.5000க்கு கள்ளச் சந்தையில் விற்கின்றனர். சில நேரங்களில் ரூ.6000 வரையிலும் விற்கப்படுவதாக கூறப்படுகிறது. இதற்கு முன்னதாக சென்னையில் நடந்த போட்டியின் போது டிக்கெட்டை பிளாக்கில் விற்ற 13 பேரை போலீசார் கைது செய்தனர். இந்த நிலையில், தான் நாளை அடுத்த போட்டி நடைபெறுகிறது. இந்தப் போட்டிக்கும் கள்ளச் சந்தை விற்பனை படு ஜோராக நடந்து வருவதாக கூறப்படுகிறது டிக்கெட் வாங்க விரும்புபவர்கள் இரவு முழுவதும் காத்திருந்தாலும் அவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சுவதாக தெரிகிறது. இது குறித்து சமூக வலைதளங்களில் ரசிகர்கள் காரசாரமாக விவாதித்து வருகின்றனர். டிக்கெட் கிடைக்காத விரக்தியால் பல கருத்துகளை ரசிகர்கள் சொல்லி வருகின்றனர். டிக்கெட்டுகள் அனைத்தும் கார்ப்பரேட், ஸ்பான்சர்கள், பிரபலங்கள், அரசு அதிகாரிகள் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பவர்கள் ஆகியோருக்கு செல்வதாக ரசிகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மொத்தத்தில் மைதானத்தின் இருக்கைகளில் 40 சதவீத டிக்கெட்டுகள் மட்டுமே ரசிகர்களுக்கு வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

## காலிஸ்தான் ஆதரவு தலைவனின் கூட்டாளி பஞ்சாபில் கைது

**அமிர்தசரஸ், ஏப். 12-**

பஞ்சாப்பில் காலிஸ்தான் ஆதரவு தலைவனின் கூட்டாளியான பப்பல்பிரீத் சிங்கை நேற்று போலீசார் கைது செய்தனர்.

காலிஸ்தான் ஆதரவு அமைப்பின் தலைவரான அம்ரித்பால் சிங், பஞ்சாப் போலீஸ் பிடியில் இருந்து தப்பியோடிய நிலையில், அவரை தனிப்படை போலீசார் தேடி வருகின்றனர். இந்த நிலையில் அம்ரித்பால் சிங்கின் நெருங்கிய கூட்டாளியான பப்பல்பிரீத் சிங் என்பவரை நேற்று அதிகாலை பஞ்சாப் போலீசார், அமிர்தசரஸ் விமான நிலையத்தில் கைது செய்தனர். இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில்,

காலிஸ்தான் ஆதரவு அமைப்பான வாரிஸ் பஞ்சாப் டி தலைவர் அம்ரித்பால் சிங்கின் வழிகாட்டியாகக் கருதப்படும் பப்பல் ப்ரீத் சிங்கை கைது செய்துள்ளோம். இவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்துள்ளதால், விமானம் மூலம் அசாமுக்கு அழைத்துச் செல்கிறோம். அங்குள்ள திப்ருகர் சிறையில் அடைக்கப்படுவார். அந்த சிறையில் அம்ரித்பால் சிங்கின் மாமன் ஹர்ஜித் சிங் மற்றும் ஓய்வுபெற்ற ராணுவ கான்ஸ்டபிளான பவுஜி என்ற வரிந்தர் சிங் ஆகியோரும் அடைக்கப்பட்டுள்ளனர். தலைமறைவாக உள்ள அம்ரித்பால் சிங்கை தொடர்ந்து தேடி வருகிறோம் என்றனர்.

### நாட்டிலேயே முதன் முறையாக ரூ. 6 கோடியில்

# 6 மாவட்டங்களில் பாரா விளையாட்டு மைதானங்கள்

### சட்டசபையில் அமைச்சர் உதயநிதி அறிவிப்பு

**சென்னை, ஏப். 12-**



நாட்டிலேயே முதன்முறையாக 6 கோடி ரூபாய் செலவில் 6 மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் பிரத்யேக பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புதிய அறிப்புகளை வெளியிட்டார். இந்த அறிவிப்புகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாதுறை, தென்காசி, ராணிபேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டு அரங்கங்களை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் நிறுவப்படும்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு பொன் விழாவை சிறப்பிக்கும் வகையில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 42 கோடியில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டு அரங்கம், நேரு உள் விளையாட்டு அரங்கம், மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கம், டென்னிஸ் விளையாட்டு அரங்கம், வேளச்சேரி நீச்சல் குளம் ஆகிய 5 முக்கிய விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான எலைட் மற்றும் பன்னாட்டு அளவிலான பேட்டிகளில் பதக்கம் வெல்லும் எம்.ஐ.எம்.எஸ். ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும். இதன்படி எலைட் திட்டத்தில் ஆண்டு நிதி உதவி ரூ.25 லட்சத்திலிருந்து ரூ.30 லட்சமாகவும், பயனாளிகளின் எண்ணிக்கை 12லிருந்து 25 ஆக உயர்த்தப்படும். எம்.ஐ.எம்.எஸ். திட்டத்தில் ஆண்டு நிதி உதவி ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.12 லட்சமாகவும், பயனாளிகளின் எண்ணிக்கை 50லிருந்து 75 ஆக உயர்த்தப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 27 விளையாட்டு விடுதிகள், 4 சிறப்பு நிலை விளைளாட்டு விடுதிகள், 6 முதன்மை நிலை விளையாட்டு விடுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நவீன எல்.இ.டி. மின் விளக்கு வசதிகள் 9 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும். 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவில்பட்டியில் மாணவர்களுக்கான முதன்மை நிலை ஹாக்கி விளையாட்டு மையம் அமைக்கப்படும். நாட்டிலேயே முதன்முறையாக 6 கோடி ரூபாய் செலவில் 6 மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் பிரத்யேக பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும்.

சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் அமைக்கப்படும். மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து டி.என். சாம்பியன்ஸ் அறக்கட்டளை' அமைப்பதற்கு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான அகாடமி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழகத்தின் விளையாட்டு மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான வழிகாட்டியாக செயல்பட விரிவான மற்றும் முழுமையான தமிழ்நாடு விளையாட்டுக் கொள்கை உருவாக்கப்படும்.

# ஐ.பி.எல். போட்டிகளை காண எம்.எல்.ஏ.க்களுக்கு பாஸ் தேவை

### முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி கோரிக்கை

**சென்னை, ஏப். 12-**



ஐ.பி.எல். போட்டிகளை காண எம்.எல்.ஏ-க்களுக்கு பாஸ் வழங்க வேண்டும் என சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் எஸ்.பி.வேலுமணி கோரிக்கை விடுத்தார்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளை காண அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு பாஸ் தேவை என எஸ்.பி.வேலுமணி கோரிக்கை விடுத்தார். மேலும், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், எம்.எல்.ஏ.-க்களுக்கு 400 ஐ.பி.எல். பாஸ் வரை வழங்கப்பட்டதாக கூறினார். அதே போல் தற்போது அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு பாஸ் வேண்டும் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. எஸ்.பி. வேலுமணி கோரிக்கை விடுத்தார்.

# சி.எஸ்.கே. அணியை தடை செய்ய பா.ம.க எம்.எல்.ஏ. கோரிக்கை

**சென்னை, ஏப். 12-**

தமிழர்களே இல்லாத சி.எஸ்.கே அணியை தடை செய்ய வேண்டும் என்று சட்டசபையில் பா.ம.க. எம்.எல்.ஏ கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக சட்டசபையில் தற்போது விளையாட்டுத் துறைக்கான மானிய கோரிக்கை நடைபெற்று வருகிறது. இதில் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ வெங்கடேஸ்வரன் பேசுகையில்,

தமிழகத்தில் திறமையான வீரர்கள் இருந்தும் ஒருவரை கூட சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தேர்வு செய்யவில்லை. தமிழர்களே இல்லாமல் தமிழக அணி என்பது போல விளம்பரம் செய்து நம் மக்களிடம் லாபம் அடைகின்றனர். எனவே தமிழர்கள் இல்லாத சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை அரசு தடை செய்ய வேண்டும் என சட்டசபையில் கோரிக்கை விடுத்தார்.

# ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் சித்திரை தேர்த்திருவிழா துவங்கியது

**ஸ்ரீரங்கம்,ஏப்.12-**

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் விருப்பன் திருநாள் எனப்படும் சித்திரை தேர்த்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது. இவ்விழா வரும் 21-ம் தேதி வரை 11 நாட்கள் நடைபெறுகிறது.

சித்திரை தேர்த்திருவிழா கொடியேற்றத்தையொட்டி நேற்று அதிகாலை 4.30 மணிக்கு நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு அதிகாலை 5 மணிக்கு கொடியேற்ற மண்டபம் வந்தார். பின்னர் காலை 6.30 மணிமுதல் 7 மணிக்குள் மேஷ லக்னத்தில் கொடியேற்றம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து காலை 7.30 மணிக்கு நம்பெருமாள் கொடிமண்டபத்தில் இருந்து புறப்பட்டு காலை 7.45 மணிக்கு கண்ணாடி அறையை சென்றடைந்தார். மாலை 4.30 மணிமுதல் 5.30 மணிவரை பேரிதாடனம் நடைபெற்றது.

பின்னர் மாலை 6.30 மணிக்கு நம்பெருமாள் உபய நாச்சியார்களுடன் புறப்பட்டு சித்திரை வீதிகள் உலா வந்து இரவு 8.30 மணிக்கு சந்தனு மண்டபம் வந்தடைந்தார். அங்கிருந்து புறப்பட்டு இரவு 9 மணிக்கு யாகசாலையை சென்றடைந்தார். அங்கு நம்பெருமாள் திருமஞ்சனம் கண்டருளுளினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 12-ந் தேதி அதிகாலை 2 மணிக்கு கண்ணாடி அறையை சென்றடைந்தார்.

விழாவின் இரண்டாம் நாளான 12-ந்தேதி மாலை கற்பகவிருஷ வாகனத்திலும், 13-ந் தேதி காலை சிம்ம வாகனத்திலும், மாலை யாளி வாகனத்திலும், 14-ந் தேதி காலை இரட்டை பிரபை வாகனத்திலும், மாலை கருடவாகனத்திலும், 15-ந்தேதி காலை சேஷ வாகனத்திலும், மாலை அனுமந்த வாகனத்திலும், 16-ந் தேதி காலை தங்க ஹம்ச வாகனத்திலும், மாலை யானை வாகனத்திலும் நம்பெருமாள் எழுந்தருளி சித்திரை வீதிகளில் உலா வருகிறார்.

17-ந் தேதி நெல்லளவு கண்டருளுகிறார். 18-ந்தேதி காலை வெள்ளி குதிரை வாகனத்திலும், மாலை தங்க குதிரை வாகனத்திலும் வீதி உலா வருகிறார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சித்திரை தேரோட்டம் வரும் 19-ந் தேதி நடைபெறுகிறது. 20-ந் தேதி சப்தாவரணம் நடைபெறுகிறது. விழாவின் நிறைவு நாளான 21-ந்தேதி நம்பெருமாள் ஆளும்பல்லக்கில் எழுந்தருளி வீதி உலா வருகிறார். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, கோவில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முன்னதாக வாழ்த்து பெற்றார். அருகில் கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்ய மிஸ்ரா, ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாதரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினை, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலன் காக்க, நிலக்கரிக்கான ஏல ஒப்பந்த நடைமுறையிலிருந்து டெல்டா பகுதிகளை விலக்கிட மத்திய அரசை வலியுறுத்தி, ரத்து செய்திட நடவடிக்கை எடுத்தமைக்காக காவிரி டெல்டா விவசாய சங்க பிரதிநிதிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர். அருகில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எம்.எல்.ஏக்கள் நாகை மாலி, சிந்தனைச்செல்வன் ஆகியோர் உள்ளனர்.

# ஆதிதிராவிட மக்களின் கல்வி சார்ந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, ஏப்.12-

ஆதிதிராவிடர் மக்களின் கல்வி சார்ந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது;-

எல்லாருக்கும் எல்லாம் என்ற உன்னதமான நோக்கம் கொண்ட திராவிட மாடல் அரசாக நமது அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர தனி அக்கறை செலுத்தி திட்டங்களை தீட்டி வருகிறோம். 14-ம் தேதி சமத்துவ நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கு பணி நியமனம், கல்வி உதவித் தொகை, வீட்டுமனை பட்டா ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான வழக்குகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மக்களின் கல்வி சார்ந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ. ஒரு லட்சம் நிதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை,ஏப். 12-

தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ. ஒரு லட்சம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், மேல வெளி கிராமம், பரிசுத்தம் நகரைச் சேர்ந்த பிச்சையா என்பவரது மகன் இளங்கோவன் என்பவர் கடந்த 3.4.2023 அன்று பள்ளியேறி கிராமத்திலுள்ள தனியாருக்கு சொந்தமான வயல்வழியாக சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக அங்கு மின் கம்பி மூலம் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த இளங்கோவனின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை நேற்று ஆய்வு செய்தனர். அருகில் முதன்மைச்செயலாளர் செந்தில்குமார், மருத்துவ கல்வி இயக்குநர் சாந்திமலர், சென்னை மண்டல தலைமை பொறியாளர் ஆயிரத்தரசு ராஜசேகரன், மண்டலக்குழு தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# கிண்டி கிங் மருத்துவமனையில் புதிய கட்டுமானப் பணிகள்

## அமைச்சர்கள் நேரில் ஆய்வு

சென்னை, ஏப்.12-

சென்னை கிண்டி கிங் மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

ரூ. 230 கோடி மதிப்பீட்டில், 4.89 ஏக்கர் நிலப்பரப்பில் தரைத்தளம் மற்றும் 6 தளங்கள் உடையதாக, 1000 படுக்கைகளுடன்கூடிய இந்த மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த 1.4.2022 அன்று தொடங்கிய இந்த மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள், மே மாதம் 15-ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஆய்வின்போது, மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச்செயலாளர் செந்தில்குமார், மருத்துவக்கல்வி இயக்குநர் சாந்திமலர், பொதுப்பணித்துறை சென்னை மண்டல தலைமை பொறியாளர் ஆயிரத்தரசு ராஜசேகரன், சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் விருப்பன் திருநாள் எனப்படும் சித்திரை தேர்த்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது. சிறப்பு அலங்காரத்தில் நம்பெருமாள் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

## அரசியலில் இருந்து விலகுவதாக

# கர்நாடக முன்னாள் அமைச்சர் ஈஸ்வரப்பா திடீர் அறிவிப்பு

பெங்களூர், ஏப்.12-

அரசியலில் இருந்து விலகுவதாக ஈசுவரப்பா திடீரென அறிவித்துள்ளார்.

கர்நாடக பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவர் ஈசுவரப்பா. முதல்வர் பசவராஜ் பொம்மை மந்திரிசபையில் அவர் கிராம வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் அமைச்சராக பணியாற்றி வந்தார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒப்பந்ததாரர் சந்தோஷ்பட்டீல் தற்கொலை விவகாரத்தில் கமிஷன் கேட்டதாக குற்றச்சாட்டு எழுந்ததை அடுத்து ஈசுவரப்பா தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

அதன் பிறகு அவர் மீதான குற்றச்சாட்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில், அவர் குற்றமற்றவர் என தெரியவந்தது. இதையடுத்து தனக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்று கேட்டார். ஆனால் கடைசி வரை அமைச்சரவை விரிவாக்கம் நடைபெறவே இல்லை. அமைச்சர் பதவி கிடைக்காததால், அவர் தனது கடும் அதிருப்தியை வெளிப்படையாகவே தெரிவித்தார்



அரசியலை விட்டு விலகுவது குறித்து முக்கிய முடிவை அறிவிக்கவும் அவர் தயாரானார். ஆனால் கட்சி மேலிடம் கூறியதை அடுத்து அவர் தனது முடிவை மாற்றி கொண்டார். இந்த நிலையில் சட்டசபை தேர்தலில் தன்னுடன் தனது மகனுக்கும் டிக்கெட் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். ஆனால் குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே டிக்கெட் வழங்கப்படும் என்று பா.ஜ.க. மேலிடம் உறுதியாக கூறியது.

இந்த நிலையில் ஈசுவரப்பா அரசியலில் இருந்து விலகுவதாக திடீரென அறிவித்துள்ளார்.

# டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணையத்தின் 20-வது கூட்டம்

## மேகதாது குறித்த விவாதம் இல்லை

புதுடெல்லி,ஏப். 12-

டெல்லியில் நேற்று நடந்த காவிரி மேலாண்மை ஆணையத்தின் 20-வது கூட்டத்தில் ஜூன் மாத நதிநீர் பங்கீடு தொடர்பாக நேற்று விவாதிக்கப்பட்டது.

காவிரி பிரச்சனைக்கு தீர்வு காண காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. 2007-ம் ஆண்டு காவிரி நடுவர் மன்றம் தமது இறுதித்தீர்ப்பை வழங்கியது. இத்தீர்ப்பில் தமிழகத்திற்கு 192 டிஎம்சி நீர் வழங்க காவிரி நடுவர் மன்றம் உத்தரவிட்டது. இதற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

சுப்ரீம் கோர்ட் காவிரி வழக்கில் 2018-ம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. தமிழகத்திற்கான காவிரி நீர் அளவை 177.25 டிஎம்சியாக குறைத்தது. காவிரி நதிநீர் வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்த உருவாக்கப்பட்டது காவிரி மேலாண்மை ஆணையம். காவிரி நதிநீர் பங்கீடுகள் தொடர்பாக முடிவெடுக்கத்தான் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்த மேலாண்மை ஆணையத்தின் 20-வது கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மேகதாது அணை விவகாரத்தை சேர்க்க கர்நாடகா கோரியது. ஆனால் தமிழக அரசு இதனை ஏற்க மறுத்தது. இதனால் நேற்றைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் மேகதாது அணை விவகாரம் சேர்க்கப்படவில்லை.

ஜூன் மாதம் பாசன ஆண்டு தொடங்குகிறது. ஆகையால் காவிரி நதிநீர் திறப்பு, பங்கீடு குறித்து நேற்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# இந்த ஆண்டு இயல்புக்கும் குறைவாகவே... (1-ம் பக்க தொடர்ச்சி)

சதவீதம் அளவுக்கு மழை பெய்தால் அது இயல்பைவிட அதிக மழைபொழிவு எனக்குறிப்பிடப்படும்.

இதன் அடிப்படையில் இந்தியாவில் இந்த ஆண்டு 94 சதவீதம் அளவுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று ஸ்கைமேட் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது இயல்பை காட்டிலும் குறைவாகும்.

இந்தியாவில் இந்த ஆண்டு இயல்பை காட்டிலும் குறைவான மழை பொழிவு இருக்கும் என்பதற்கு காலநிலை மாற்றத்தில் ஏற்பட்ட தாக்கமே காரணம் என்றும் தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

ஆசிய நாடுகளில் இந்த ஆண்டு வறண்ட வானிலை காணப்படும். இதற்கு எல்நினோ மாற்றம் அதிகரித்து வருவதே காரணம். ஆசிய நாடுகள் இடையே வறட்சி அதிகரித்து வருவதும் பருவ மழை இயல்பை காட்டிலும் குறைவாக பெய்ய காரணம் என்று கூறியுள்ளது. பருவ மழை இயல்பை காட்டிலும் குறைவாக பெய்தால் அது விவசாயிகளை பெரிதும் பாதிக்கும் என்பதால் அதற்கேற்ப அவர்கள் சாகுபடி பணிகளில் ஈடுபட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அருகே அ.புதுப்பட்டியில் உள்ள பாலமரத்தம்மன்-சுந்தரவள்ளி அம்மன் கோவில் பங்குனி திருவிழாவையொட்டி ஜல்லிக்கட்டு விழா நடைபெற்றது. அப்போது வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்து வந்த காளை தன்னை அடக்க வந்த வீரரை தூக்கி பந்ததாடிய காட்சி.